பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 01, வியாழக்கிழமை 17.08.2017 கதிர் 284

## சிங்களத்தை மறந்த ஷிராந்தி ராஜபக்ஷ!



கொழும்பு,ஓக.17
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டார். விசாரணையின் பின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்த பொலிஸார் அதனை படித்துப் பார்த்து பக்கம் 18

# மஹிந்த தரப்பை மடக்க 'ட்ரயல் - அட் பார்' மன்று!

## விசேட நீதிமன்றங்களை அமைக்கும் திட்டம் இல்லை

கொழும்பு, ஓகஸ்ட் 17
மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சியின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மோசமான ஊழல்,மோசடிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக மேல்நீதிமன்றத்தில் 'ட்ரயல் - அட்பார்' முறையில் விசா ரணை நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது. பக்கம் 18

## இனித்தான் மஹிந்தருக்கு எதிராக அதிரடி நடவடிக்கை ஆரம்பமாம்!

### இப்படிக் கூறுகிறார் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக் காலத்தில் கட்ட விழ்ந்த ஊழல், மோசடிகள் தொடர்பில் அவருக் கும், அவரது குடும்பத் தினருக்கும், அவரது சகாக் களுக்கும் எதிரான அதிரடி நடவடிக் கைகள் இனித் தான் ஆரம்பிக்கும். அவை வேகமாக முன்னெடுக்கப் படும்.

அமைச்சரவைப் பேச் சாளரான டாக்டர் ராஜித சேனாரத்ன இவ்வாறு நேற்று செய்தியாளர் மாநாட்டில் உறுதிப்படத் தெரிவித்தார். (உ)

### மாகாண அமைச்சர் பதவி

## ரெலோவின் பரிந்துரை விந்தனேதான்!

### அதில் மாற்றம் ஏதும் கிடையாது என செல்வம் உறுதி

வவுனியா, ஓக.17
"எமது கட்சி ஒரு முடிவை எடுத்து மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை எமது கட்சி சார்பிலான அமைச்சர் பதவிக்கு பரிந்துரை செய்துள்ளது. அதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை; இடமிருக்கவும் முடியாது."

- இவ்வாறு உறுதிபடக் கூறியிருக்கின்றார் ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

"வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனைப் பதவி விலகுமாறு கட்சி கோரியபோது, தான் பதவி விலகமாட்டேன் என்றும் கட்சிதனக்குபெரியதில்லை பக்கம் 18

## நேற்றைய விசாரணை யோஷித ராஜபக்ஷவிடம்




கொழும்பு,ஓக.17
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்ஷ, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ரக்பி வீரர் தாஜுதீன் படுகொலை தொடர்பிலேயே யோஷித ராஜபக்ஷ, குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அவரது தாயாரான ஷிராந்தி ராஜபக்ஷ, நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலை பக்கம் 18

### பாதுகாப்பு அதிகாரியின் பிரதானியான

## ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா ஓய்வுக்கு அனுமதி கோருகிறார்



கொழும்பு,ஓக.17
முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியுமான ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, தமது பதவியில் இருந்து ஓய்வு பெறத் தம்மை அனுமதிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் எழுதியுள்ளார். பக்கம் 18

## கூட்டு எதிரணியின் 7 எம்.பிக்கள் விரைவில் அரசு பக்கம் பாய்வராம்

கொழும்பு, ஓக.17
கூட்டு எதிரணியைச் சேர்ந்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைய விருக்கின்றனர் என சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார்.

எதிர்வரும்தேர்தல்களை இலக்கு வைத்து கட்சியை பக்கம் 18

## பொலிஸில் தமிழ் இளைஞர், யுவதிகளை இணையுமாறு முதல்வர் கோரலாமா?





### தவறு எனக் கண்டிக்கின்றார் சிவமோகன் எம்.பி.

வவுனியா, ஓக.17
அதிகாரப் பகிர்வு மூலம் தமிழர் தாயகத்துக்குரிய பொலிஸ் அதிகாரம் தமிழர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. இந்தநிலையில் தமிழ் இளைஞர், யுவதிகளைப் பொலிஸில் சேருமாறு வடக்கு மாகாண முதல்வர் சி.வீ. விக்னேஸ்வரன் கூறுகின்றமை அவரது திராணியற்ற தன்மையையே வெளிக்காட்டுகின்றது.

- இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கண்டித்திருக்கின்றார்.

இவ்வாறு தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் படையணியில் இணைகின்ற போது தமிழர்களை வைத்தே தமிழ் மக்களை அடக்கியாளும் திட்டத்தை சிங்கள அரசு மேற்கொள்ள இது மிகப்பெரிய வாய்ப்பாக அமையும் என்பதில் பக்கம் 18

## யாழ். மின்சார நிலைய வீதியில் ஒன்பது கடைகள் அகற்றப்பட்டன



யாழ்ப்பாணம்,ஓக.17
யாழ்ப்பாண மின்சார நிலைய வீதியில் மருத்துவ பீடத்திற்குச் சொந்தமான காணி யில் இயங்கிவந்த ஒன்பது வர்த்தக நிலையங்களை அகற்றும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நீதிமன்ற உத்தரவிற்கமையவே இந்த வர்த்தக நிலையங்களை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனக் கூறப்பட்டது.

இந்த வர்த்தக நிலையங்களை அகற்றும் நட பக்கம் 18

### அளப்பு அருணாசலம்




## பொலிஸ் மா அதிபரை விசாரிக்கும் அதிகாரம் பொலிஸ் ஆணைக் குழுவுக்கு கிடையாதாம்!

கொழும்பு,ஓக.17
பொலிஸ் மா அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள தேசியபொலிஸ்ஆணைக் குழுவுக்கு அதிகாரம் இல்லையென ஆணைக்குழுவின் செயலாளர் ஆரிய தாச குரே தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத் தில் 'லிப்ட்' திருத்தம் செய்யும் ஊழியர் ஒருவரின் சட்டையைப் பிடித்து அச்சுறுத்தினார் எனப் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழு விசாரணை செய்யாது பக்கம் 18

# விஜயதாஸவுக்கு எதிரான பிரேரணை:

## 70 எம்.பிக்கள் ஆதரவு!

கொழும்பு, ஒக. 17

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் இதுவரை 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டு, அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை காப்பாற்றத் தவறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டி, ஐ.தே.கவின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களால், நீதி அமைச்சர் வியேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கை யில்லா பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இதுவரை ஐ.தே.கவின் 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நகல் இன்று நடைபெறவுள்ள ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



நீதி அமைச்சர் பதவியில் இருந்து விஜயதாஸ ராஜபக்ஷ விலக வேண்டும் அல்லது அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், ஐ.தே.கவினர் வலியுறுத்தி வருகின்றனர்.

முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிரான விசாரணைகளை இழுத்தடித்து வருகிறார் எனவும், விஜயதாஸ ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அதேவேளை, விஜயதாஸ ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய்வதற்கு, மூன்று பௌத்த பீடங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

அத்துடன், விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக வாக்களிப்போம் என்று மஹிந்த ராஜபக்ஷவும் அவரது தலைமையிலான கூட்டு எதிரணியும் கூறிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## விஜயதாஸ ராஜபக்ஷவை இலக்கு வைத்துள்ளது ஐ.எஸ். அமைப்பு!

### சிங்கள ராவய அமைப்பு குற்றச்சாட்டு

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டதன் பின்னணியில் ஐ.எஸ். அமைப்பு இருக்கிறது என சிங்கள ராவய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுவதன் பின்னணி தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்தோம்.

அந்த வகையில், ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் இலங்கையில் இருக்கின்றனர் என்றும் நாட்டில் சில முஸ்லிம் அடிப்படைவாத குழுக்கள் இருக்கின்றன எனவும் நீதியமைச்சர் அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அவ்வாறு கருத்து தெரிவித்தமையின் பலனாகவே அடிப்படை வாத குழுக்களை பிரதிநிதித் துவப்படுத்தும் சிலர், அவருக்கு எதிராக நம்பிக்யில்லாப் பிரேரணை கொண்டுவர முற்படுகின்றனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி தேசிய சிந்தனை கொண்டவர்களுக்கு இடமளிக்கும் கட்சி கிடையாது. அவ்வாறான கொள்கையை உடையவர்களுக்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கட்சி இருக்கின்றது.

ஆகையால்தான் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவர முற்படுகின்றனர் என்றும் மாகல்கந்தே சுதத்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்!

நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நெடுந்தீவில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் நேற்று காலை 10 மணியளவில் நெடுந் தீவு பிரதேசசெயலக மண்டபத்தில் நடத்தப்பட்டுள்ளது.

மேலும், ஒருங்கிணைத் தலைவரான சிவஞானம் சிறிதரன் தலைமையில் நடைபெற்றகூட்டத்தில் வடமாகாண உறுப்பினர்கள், துறைசார் திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஒக.17

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத் தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

**இன்றைய தலைப்பு:** 'இறை நம்பிக்கை'.(இ)

## இராமகிருஷ்ணமிஷன் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர், ஒக.17

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஆலயப் பின் வீதியிலுள்ள மூத்த தம்பி அன்னதான மடத்தில் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெற்று வருகின்றது.

சப்பைரதம், தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டுப் பல சிறந்த புத்தகங்கள் விசேடமாகத் தருவிக்கப்பட்டுள்ளன.

தினசரி மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சி நடைபெற்று வருகிறது. தேர், தீர்த்தத் திருவிழா நாள்களில் மட்டும் காலை 7 மணி முதல் இரவு மணி வரை கண்காட்சி நடைபெறும். அனைவரும் பார்வையிட்டுப் பயன்பெறலாம் என்று ஒருங்கிணைப்பாளர் அறிவித்திருக்கின்றார். (இ)

## இந்திய சுதந்திர தின கலாசார நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி!

இந்தியாவின் 71 ஆவது சுதந்திரத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாசார நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்தியாவின் பிரபல இசைக் கலைஞர் பிரிகம் கோஷ் நிகழ்விற்கான இசை ஒருங்கிணைப்பை மேற்கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க் மற்றும் இந்தியத் தூதுவர் உள்ளிட்ட அதிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (க)




யாழ்ப்பாணம், ஒக.17

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: சுகன்யா அரவிந்தன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- க.கண்ணதாஸ், கெஞ்சிரா- ஞா.வசந்.

* * *

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவநெறி சன்மார்க்கர் செ.கந்த சத்தியதாசன் ''முருகப் பெருமானின் திருப்பெருவடிவம்' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

## தேர்தலை ஒத்திவைக்க முடியாது!

### ஆளுங்கட்சியினரிடம் கூறினார் தேசப்பிரிய!

கொழும்பு, ஒக. 17

சகல மாகாணங்களுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத் துவது அவசியம் எனக் கூறி, மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க இணங்க முடியாது என தேர்தல் ஆணைக்குழு அரசுக்கு உத்தியோகபூர்வமற்ற முறை யில் அறிவித்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஆளும் கட்சியின் தலைவர் களிடம் இதனைக் கூறியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சகல மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்தும் வகையில் விரைவில் பதவிக்காலம் முடியும் கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனை ஒன்று அண்மையில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

எனினும், தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்த் துள்ளனர். அண்மையில் நடை பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவர்கள் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல் இந்த வருடத்தில் நடக்கும் வாய்ப்புள்ளது எனவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## நல்லூரில் நாடகத் திருவிழா; இன்றிரவு மூன்று நாடகங்கள்

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத் திருவிழா' நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத்தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும்.

இதில் தே.தேவானந்தின் '' பாட்டி'' (பொம்மலாட்ட நாடகம்) இன்று வியாழக்கிழமை இரவு 7 மணி முதல் 7.40 மணி வரையும், 'ஒரு மோட்டார் சைக்கிளும் 9 பேரும்' (சிறுவர் நாடகம்) 7.45 மணி முதல் 8.45 மணி வரையும், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'பஞ்சவர்ண நரியார்' (சிறுவர் நாடகம்) 8.45 மணி முதல் 10 மணி வரையும் இடம்பெறவுள்ளன.

# ஜனாதிபதி - ஐக்கிய தேசிய முன்னணி நேற்றைய முக்கிய சந்திப்பு ஒத்திவைப்பு

## இனித் திங்களன்று நடக்கும் எனத் தகவல்

கொழும்பு, ஓக.17

நல்லாட்சி அரசின் இரு பிரதானபங்காளித்தரப்புகளுக்கும் இடையில் ஏற்பட்டு வரும் முறுகல் நிலை குறித்தும் அதை நீக்குவது குறித்தும் ஜனாதிபதிக்கும், ஐக்கிய தேசிய முன்னணியில் இடம்பற்றிருக்கும் ஐ.தே.க. உட்பட்ட கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெறவிருந்த சந்திப்பு கடைசி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டது. அது இனிமேல் எதிர்வரும் திங்களன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் மனோ கணேசன் இத்தகவலை வெளியிட்டார்.

தற்போதைய நல்லாட்சி அரசுக்கான உடன்பாட்டில் இருந்து விலகி டிசெம்பர் 31ஆம் திகதியுடன் ஐ.தே.க. தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தன்பாட்டில் தனித்து அரசு அமைக்கும் என்று கடந்த வாரம் கொழும்பில் செய்திகள் வெளியாகியமையை அடுத்தே ஐ.தே.மு. - ஜனாதிபதி இடையேயான பேச்சுக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அண்மைக் காலமாக நல்லாட்சி அரசின் மற்றைய பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கூட்டு எதிரணியுடன் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிராக வெளியிட்டு வரும் கருத்துகள் குறித்து ஐ.தே. முன்னணித் தரப்புகள் கடும் சீற்றமும் குழப்பமும் அடைந்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே - மேற்படி கருத்து வேறுபாடுகளை களையும் நோக்கோடு - நேற்றைய சந்திப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்தச் சந்திப்பு திங்களன்று நடைபெறும் எனத் தற்போது அறிவிக்கப்படுகின்றது. (உ)

## கடலட்டை பிடித்த 3 கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்



சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளைப் பிடித்துக் கொண்டிருந்த 3 உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் 7.5 கடல்மைல் தொலைவில் வைத்து நேற்று அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

அவர்கள் பயன்படுத்திய டிங்கி படகொன்றுடன், பிடிக்கப்பட்டிருந்த 578 கிலோ நிறையுடைய ஆயிரத்து 911 கடலட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள், பருத்தித்துறை கடற்றொழிலாளர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

# தற்காப்பு முறையைக் கைவிட்டு விட்டு துரத்தித் தாக்கும் முறையை நாடுங்கள்!

## நல்லாட்சி அரசுக்கு வண.அமிலதேரர் அழுத்தம்



நல்லாட்சி அரசு தற்காப்பு முறைகளைப் பின்பற்றுவதை நிறுத்தி விட்டு துரத்திச் சென்று தாக்கும் முறையையே கைக்கொள்ள வேண்டுமென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வண.தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

‘62 இலட்சம் மக்களின் ஆணையை பாதுகாப்போம்’ - எனும் தொனிப்பொருளில் சத்தியாகிரக போராட்டம் ஒன்று நேற்று கொழும்பு விகார மகா தேவி பூங்காவில் இடம்பெற்றது.

அங்கு கலந்துகொண்டு உரையாற்றும் போதே வண.தம்பர அமில தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் அளித்த 62 லட்சம் வாக்குகளின் ஆணையை சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்து இந்த நிகழ்வில் குறை கூறப்பட்டது.

ஜனாதிபதி இரண்டரை வருடங்களை கடத்தியுள்ளார், அதே போல் பிரதமர் இரண்டு வருடங்களை கடத்தியுள்ளார். இதனால் மக்களுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. பொதுமக்களின் பொறுமை சிவப்பு சமிக்ஞையைத் தாண்டிச்சென்று விட்டது. எனவே, அதனைக் கருத்தில் கொண்டு பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை பயமின்றிக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க முன்வாருங்கள் - என இதன்போது வண.தம்பர அமில தேரர் அழைப்பு விடுத்தார். (உ)

# நகை கொள்ளை எனப் பொய் முறைப்பாடு: குற்றத்தை ஏற்றார்கள் கனடாத் தம்பதியர்

சுமார் 51 லட்சம் ரூபா பெறுமதியான தங்களின் 89 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன எனக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பொய் முறைப்பாடு செய்த கனடா தம்பதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

பொய் முறைப்பாடு மேற்கொண்டதற்கான வழக்கை நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கனடா நாட்டில் இருந்து வந்திருந்த மேற்படி தம்பதிகள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

அப்போதே நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்று பொய் முறைப்பாடு செய்த குற்றத்தை நீதிமன்றில் கனடா தம்பதிகள் ஏற்றுக்கொண்டனர்.

அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை எதிர்வரும் 23 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கனடாவில் இருந்து வந்திருந்த இந்தத் தம்பதிகள் கனடாவில் காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கடந்த 7ஆம் திகதி வரணியில் உள்ள தங்களது வீட்டில் வைத்து சுமார் 51 லட்சம் ரூபா பெறுமதியான 89 பவுண் நகைகள் கத்தி முனையில் கொள்ளையிடப்பட்டன எனக் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீண்ட தூரம் நடந்த மாணவிக்கு சைக்கிள் வழங்கிய அமைச்சர் அனந்தி



வழிமறித்துப் பேசியபோது...



சைக்கிள் அன்பளிப்பு...

இந்த மாத முற்பகுதியில் வேலணைப் பிரதேச சபையின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகச் சென்ற வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகார, சமூக சேவைகள், கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன், வழியில் நீண்ட தூரம் நடந்து செல்லும் மாணவி இருவரைக் கண்டார். தமது வாகனத்தை விட்டு இறங்கி அந்த மாணவிகளுடன் அவர் கலந்துரையாடினார். அந்த மாணவிகளின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அந்த மாணவிகளில் ஒருவரை நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அலுவலகத்துக்கு அழைத்த அமைச்சர் அனந்தி சசிதரன், அம்மாணவியின் குடும்பத்துக்கு உதவும் வகையில் தமது சொந்த நிதியில் துவிச்சக்கர வண்டி ஒன்றைக் கொள்வனவு செய்து வழங்கினார். (உ)

## வவுனியா வளாக வெள்ளி விழா

யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாகத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு வளாகத்தில் முதல்வர் த.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவெள்ளிவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞான, கணித பாடங்களில் நடத்தப்பட்ட புதிர் போட்டிகளில்வெற்றிபெற்றமாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

வவுனியா வளாகத்தில் கடந்த 20 வருடங்களாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற முதல்வர்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு, கலைநிகழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல, விசேட விருந்தினராக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மோகன் லால் கிரேரு உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சாவகச்சேரியில் விபத்தில் சிக்கி முதியவர் காயம்

சாவகச்சேரி வடக்கு சோலையம்மன் கோவிலுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்தார். அல்லாரை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசேந்திரம் (வயது-69) என்பவரே இவ் விபத்தில் காயமடைந்தமையை அடுத்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாலையில் வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற முதியவரை எதிரே வந்த வான் மோதியதில் அவர் காயமடைந்தார்.




நேரந் தவறாத பூசைகள் உற்சவங்கள்
ஆரம்பம் பூர்த்தி அதன் நிகழ்வு - பூரணமாய்
ஆற்றும் படுத்தும் விதிமுறைகள் நல்லூரின்
ஏற்றத்துக் கான எழில்.

- வேலணையூர் (அமரர்) சி.இராசரத்தினம்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கூட்டமைப்புக் குழப்பம்

வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள பிரச்சினை, முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை மையப்படுத்தியதாக இருந்தாலும் கூட, அது ஒரு புதிய பரிமாணத்துக்குள் - தீர்க்கமான கட்டத்துக்குள் - நுழைந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

பல கட்சிகள் ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் செயற்பாட்டுப் பொறிமுறை சம்பந்தமான சர்ச்சைகள் இனிமேல் மோசமாக வெடிக்கலாம் என்று நம்பக் கூடிய சூழல் தோன்றியிருக்கின்றது.இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட நான்கு கட்சிகள் இணைந்து கூட்டமைப்பை உருவாக்கியிருந்தாலும் கூட, பல கட்சிகளின் கூட்டான ஓர் அமைப்பாக அது பதிவு செய்யப்படவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற முகதாவிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களைச் சந்தித்து வருகின்றது.

இந்த முரணிலையின் பிரதிபலிப்பை அடுத்து வரும் வாரங்களில் களத்தில் காணக்கூடியதாக இருக்கும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

மாகாணசபை அமைச்சர் பதவி தொடர்பில் ரெலோவுக்கும், அதன் சார்பில் மாகாண அமைச்சுப் பதவியை வைத்திருக்கும் பா.டெனீஸ்வரனுக்கும் இடையில் கருத்து முரணிலை உக்கிரமடைந்திருக்கின்றது.

அமைச்சர் பதவியை இராஜினமாச் செய் என்கிறது ரெலோ கட்சி. "முடியாது. முடிந்தால் அமைச்சுப் பதவியில் இருந்து அகற்றிப் பாருங்கள்!" என்று சவால் விடுகிறார் டெனீஸ்வரன்.

பொறுத்துப் பார்த்த ரெலோ கட்சி, டெனீஸ்வரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயாராகி விட்டது. அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக நாளை மறுதினம் வவுனியாவில் கூடுகின்றது அக் கட்சியின் தலைமைக்குழு.

பெரும்பாலும் அவரைக் கட்சியிலிருந்து விலக்கி - அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி - முடிவு எடுக்கப்படக்கூடும்.

கட்சியிலிருந்து அவர் வெளியேற்றப்படுகின்றமையால், கட்சி சார்பில் மாகாணசபை உறுப்பினர் பதவியிலிருந்து அவர் நீக்கப்படவேண்டும் என எதிர்பார்க்கும் ரெலோ, அது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளருக்கு அறிவிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அமைச்சர் டெனீஸ்வரன் ரெலோ கட்சியின் சார்பில் மாகாண சபைத் தேர்தலில் குதித்தாராயினும், சட்ட ரீதியாக அவர் தேர்தலில் போட்டியிட்ட கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியே. ஆகவே, அவரை ரெலோ தனது கட்சியிலிருந்து நீக்கியமையை ஒட்டி, மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து அவரை அகற்றுவதாயின் அதற்கான கடிதத்தைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பவேண்டியது இலங்கைத் தமிழரசுக் கட்சியே.

அப்படி ஒரு கடிதம் அனுப்பியவுடன் டெனீஸ்வரனின் மாகாண சபை உறுப்பினர் பதவி பறிபோய்விடும் என்று அர்த்தமல்ல. அதற்குப் பின்னரும் அத்தகைய முடிவைச் செயற்படுத்துவதற்கு பல சட்ட இடைஞ்சல்கள் இருக்கும். அதுவல்ல விடயம்.

அவரை மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலக்குமாறு ரெலோ கூறும்போது, அதனை ஏற்று அத்தகைய கடிதம் ஒன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி வழங்குமா, தேர்தல் ஆணையாளருக்கு அத்தகைய கடிதம் ஒன்றை அனுப்புமா என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

ஏற்கனவே தனது கட்சியின் உறுப்பினராக இருந்தவரும் மாகாண சபையின் தற்போதைய அமைச்சருமான அனந்தி சசிதரனுக்கு எதிராக ஓர் உள்ளக விசாரணை நடவடிக்கையை தமிழரசுக் கட்சி ஆரம்பித்து முன்நகர்த்தி வருகின்றது.

டெனீஸ்வரன் விடயத்தில் ரெலோ முன்வைக்கும் கோரிக்கையை ஏற்றுச் செயற்படாவிட்டால், அனந்தி விடயத்தில் அதே நடவடிக்கை ஒன்றை தமிழரசுக் கட்சியால் எடுக்கமுடியாமல் போகும்.

அதேசமயம், கூட்டமைப்புக்குள் வடக்கு முதலமைச்சருக்கு எதிரான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அணியோடு கைகோத்து நிற்பவர் டெனீஸ்வரன். அவரைக் கைவிட்டு ரெலோவின் கோரிக்கையை ஏற்று டெனீஸ்வரனுக்கு எதிரான கடிதத்தை தேர்தல் ஆணையகத்துக்கு அனுப்புவதற்கு தமிழரசுக் கட்சி இணங்குமா என்பது அடுத்த கேள்வியாகும்.

இதேபோன்று வடக்கு மாகாண சபைக்குள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய அங்கத்தவர்கள் கதைகள் பலவுண்டு.

தேர்தல் முடிந்த கையோடே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சார்பில் வென்றிருந்த ஐங்கரநேசன் அக்கட்சியின் முடிவுக்கு மாறாக அமைச்சர் பதவியை ஏற்றார். அதனால் அவரை ஈ.பி.ஆர்.எல்.எவ், தனது கட்சியிலிருந்து வெளியேற்றியது. ஆனால், அதற்காக அவரை மாகாண சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குங்கள் என்ற அறிவிப்பை தமிழரசுக் கட்சி விடுக்கவில்லை.

அதேபோல, அக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட ஜெயசேகரம், இப்போது தமிழரசுக் கட்சியின் பரிந்துரையின் மாகாணசபை உறுப்பினராகப் பதவியேற்றிருக்கின்றார்.

அதற்காக அவருக்கு எதிராக நடவடிக்கை ஏதும் பாயவில்லை.

இப்போது டெனீஸ்வரன் விடயத்தில் நடவடிக்கை எடுக்கும்படி ரெலோ கோரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது தமிழரசுக் கட்சி என்ன செய்யப் போகின்றது என்பதே வினா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சி என்ற வகையிலும், அந்தக் கூட்டமைப்பின் முகதாவில் தேர்தலை எதிர்கொள்ளும் கட்சிப் பெயரை வைத்திருக்கும் அமைப்பு என்ற ரீதியிலும், அடுத்து வரும் வாரங்களில் தமிழரசுக் கட்சி பல சிக்கல்களை எதிர்கொள்ளப் போகின்றது. அதில் ஒன்று ரொலோ பக்கத்திலிருந்து வரும் என்பது நிச்சயம்.

# இனவாதத் தீயில் நாட்டைக் கொளுத்துவதை நிறுத்த வேண்டும் என்கிறார் டிலான் பெரேரா!



கொழும்பு, ஓக.17

இனவாதம், மதவாதங்களைத் தூண்டி நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துவதை தற்போதாவது நிறுத்த வேண்டும் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளை ஹலி-எல பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்கள - பௌத்த முத்திரையைக் குத்திக்கொண்டு மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள் திருந்துவதற்கான சிறந்த இடம் ஹாலி-எல பிரதேசமாகும்.

குறைந்தது ஹாலி-எல பிரதேசத்தில் ஊடாக தேசிய ஐக்கியத்தைக் கற்பிக்க வேண்டும்.

யார் எதிர்த்தாலும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களை வழங்க வேண்டியது கட்டாயம்.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். அதேபோல் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடபகுதி மக்களுக்கு கூறி வரும் பொய்களை நிறுத்த வேண்டும்.

இதேவேளை, வாக்குகளைப் பெறுவதற்காக விக்னேஸ்வரன் இனவாதத்தைப் பரப்பி வருகிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்னும் இரண்டு மாதங்களில் கிழக்கு மாகாண சபை கலைப்பு!



## பிரதி அமைச்சர் அமீர் அலி கூறுகிறார்

கொழும்பு, ஓக. 17

கிழக்கு மாகாண சபை இன்னும் இரண்டு மாதங்களில் கலைக்கப்படும் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கூறியுள்ளார்.

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபை இன்னும் இரண்டு மாதங்களில் கலைக்கப்படும். அதில் பல மாற்றங்கள் செய்ய வேண்டி ஏற்படும். அந்த வகையில் கிழக்கு மாகாணத்திற்கு நல்ல சேவைகளைச் செய்யக் கூடியவர்கள் இருந்தாலும் பரவாயில்லை அவர்களையே மக்கள் அடுத்தமுறை தெரிவு செய்ய வேண்டும்.

இந்தக் கிழக்கு மாகாண அரசின் கால கட்டத்தில் மாகாணத்தின் கல்வி கடுமையாக வீழ்ச் சியடைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக கிழக்கு மாகாணத்தினுடைய கல்வி ஒன்பதாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வி மிகவும் மோசமான நிலையை எதிர்கொண்டுள்ளது என்ற குற்றச்சாட்டை நாட்டின் ஜனாதிபதி பகிரங்கமாகவே முன்வைத்தார்.

எனவே, அதனோடு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், முதலமைச்சர் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# காணி அபகரிப்புக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!



பொத்துவில் பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 650 ஏக்கர் காணி வன பரிபாலனத் திணைக்களத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நேற்றுமுன்தினம் புலிபிடித்தசேனை கமக்காரர் அமைப்பின் ஏற்பாட்டில் மதுரம் வெளி, புலிபிடித்த சேனை பகுதி மக்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கையில்-

வனபரிபாலனத் திணைக்களத்தினர் எமது பகுதிக்கு வந்து பெர்மிட் காணிகளில் கட்டை போட்டு ஆக்கிரமிக்கத் தலைப்பட்டனர்.



நாம் இது தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பலருக்கும் எழுத்து மூல முறைப்பாட்டை அனுப்பியிருந்தோம்.

எனினும், இதுவரையில் யாரும் பதில் அனுப்பவுமில்லை, நடவடிக்கை எடுக்கவுமில்லை.

அதனால் நாங்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

## உடலால் பாவிக்கப்படக் கூடிய இரும்புச் சத்து



ஹீம் [Haem] இரும்புச் சத்து மாமிச உணவுகளில் கிடைக்கும். இலகுவில் அகத்துறிஞ்சப்படக் கூடியது.

ஹீம் அல்லாத இரும்புச் சத்து தாவர உணவுகளில் கிடைக்கும். இலகுவில் அகத்துறிஞ்சப்படமுடியாதது.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

18.08.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : திருவாதிரை மு.இ 9.01 வரை
திதி : ஏகாதசி மு.ப 9.02 வரை
சுபநேரம் : 6.05 – 7.35 வரை
இராகுகாலம் : 10.35 – 12.05 வரை

# வடக்கின் அண்மைக் கால சம்பவங்களுக்கு முன்னாள் போராளிகள் காரணம் அல்லர்!

## கூறுகிறார் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க



வடக்கில் அண்மையில் பொலிஸார் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் உள்ளூர் விவகாரங்களாகும். இதனால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை இவ்வாறான சம்பவங்களுக்கு முன்னாள் போராளிகள் காரணம் அல்லர் என்று இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் ஒருவர் கொல்லப்பட்டமையை அடுத்தும், மேலும் இரு பொலிஸார் மீது தாக்குதல். நடத்தப்பட்டமையைஅடுத்தும் பாதுகாப்புத் தரப்பினர் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

வடக்கில் இராணுவ மற்றும் பொலிஸாரின் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தாக்குதல் உள்ளூர் சம்பவங்களாகும். இதனை பரந்துபட்ட செயற்பாடு ஒன்றின் அங்கமாகக் கருதக் கூடாது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களையும் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடுத்த ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றனர்.

நல்லூர் துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையவர் விடுதலைப் புலிகளின் பின்னணியைக்கொண்டவர்தான்.ஆனால், அவர் 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த அமைப்பில் அவர் இருக்கவில்லை.

தெற்கில் நடக்கின்ற இது போன்றதாக்குதல்களையாரூமே, தேசிய பாதுகாப்பு விவகாரத்துடன்தொடர்புபடுத்தவில்லை.

இது போருக்குப் பிந்திய சமூகத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றமை இயற்கையே.

வடக்கின் அண்மைய சம்பவங்களுக்கும், விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் எந்த நேரடித் தொடர்புகளும் கிடையா.

யாராவது ஒரு முன்னாள் புலி உறுப்பினர் இதுபோன்ற சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருப்பாராயின் கூட அது, தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது.

கொக்குவிலில் இரண்டு பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவத்தில் கூட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குத் தொடர்பில்லை.

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், 12 ஆயிரத்து 180 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது.

இவர்களில், ஆயிரத்து 963 பேர் யாழ்ப்பாணக் குடாநாட்டில்இருக்கின்றனர்.அவர்களில் 600 பேர் பெண்களாவர்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த மேலும் 200 பேர் புனர்வாழ்வு அளிக்கப்படாத நிலையில் இன்னமும் யாழ்ப்பாணத்தில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### வடக்கு மாகாண சபைக்குரிய

## தற்போதைய அதிகாரங்களுடன் மக்களுக்கு சேவையாற்றலாம்!

**நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அறிக்கை**

மாகாண சபை முறைமை வடக்கைப் பொறுத்தவரையில் முயலாமை - இயலாமை போன்ற காரணங்களாலும், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல், மோசடிகள் காரணமாகவும் மக்கள் பணிக்குரிய செயற்றிறன்இன்மையாக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

வட மாகாண சபையில் அங்கம் வகிக்கின்ற பலருக்கு மாகாண சபை உறுப்புரிமை வானத்திலிருந்து வந்ததைப் போன்று கிடைத்திருப்பதால் அதனது பெறுமதியை அவர்கள் உணர இயலாதவர்களாக உள்ளமையாலேயே அதன் மூலமான எமது மக்களுக்கான பணிகள் முடக்கப்பட்டுள்ளன.

வடமாகாணசபையின்செயற்றிறன் இன்மையை அவதானத்தில் கொண்டு, மாகாண சபை முறைமை குறித்து எவரும் குறைத்து மதிப்பீடு செய்யக் கூடாது.

தற்போது இருக்கின்ற அதிகாரங்களை வைத்து செயற்படுத்தினால் கூட எமது மக்களுக்கு மாகாண சபையூடாக பல்வேறு பணிகளை ஆற்ற முடியும்.எனினும், தற்போது மாகாண சபைகளுக்குவழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றே நாம் தொடர்ந்தும்வலியுறுத்திவருகின்றோம்.

அந்த வகையில், மாகாண சபைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு, அதிகாரபூர்வமாகவும், நடைமுறை ரீதியாகவும் பறிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரமான அதிகாரங்களும்வழங்கப்படவேண்டுமென்றும், அத்துடன் மேலும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த ஆட்சியின்போது மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்குஎதிராகநாம்நாடாளுமன்ற உறுப்பினர்கள்பலரதுகையொப்பங்களை வாங்கியும், விவாதித்தும் அந்த ஏற்பாடுகளைத் தடுத்திருந்தோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைக் குறைப்பதற்கு-பறிப்பதற்குமுன்னெடுக்கப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் நாம் வன்மையாகக்கண்டிப்பதுடன்,அதற்குஒரு போதும் சிறுபான்மைக் கட்சிகள் துணைபோகக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மக்களின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் வேளையில் பழிகூறல், அவமானப்படுத்தல்கள் சாதாரணமானவை!



**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு**

நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பயணத்தின் போது பழிகூறல் மற்றும் அவமானப்படுத்தல்கள் பிரச்சினைகளல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பன்னிப்பிட்டிய ஸ்ரீ தர்ம விஜயாலோக்க விகாரைக்கு மியன்மாரிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்த பிரானின் திருவுருவத்தை திரைநீக்கம் செய்யும்நிகழ்வில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அன்று புத்தபிரான் கூட அவமானப்படுத்தல்களுக்கு உட்பட்டிருந்தார். இந்த நிலையில் வர்த்தகமயமாக்கலுடன் இன்று சீர்குலைந்து போயுள்ள சமூகத்தில் நான் அவமானப் படுத்தப்படுவது புதுமையான விடயமல்ல.

இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய மகாத்மா காந்தி, இலங்கையின் முன்னோடி அரசியல் தலைவரான பண்டாரநாயக்கா போன்ற உலகம் போற்றும் தலைவர்கள் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தமது வரலாற்று கடமையை ஆற்றிய போது அவர்கள் அவமானப்படுத்தப்பட்டனர்.

அறிவைப் பெறுவதற்காகவும் சமூக அபிவிருத்திக்காகவும் பாவிக்கப்பட வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் இன்று மற்றவர்களை அவமானப்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

இந்த மோசமான நிலையிலிருந்து இளம் தலைமுறையினரை மீட்பதற்காக அவர்களிடம் ஆன்மீக அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஜனாதிபதி புத்தர் சிலையைத் திறந்து வைத்தார் மக்கள் மலர்தூவி வழிபாடாற்றினார்.

மியன்மாரைச் சேர்ந்த சுதந்தா சத்தம்மகீத்திசார தேரர் ஜனாதிபதிக்கு நினைவு பரிசொன்றை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அதிவண. நாபான பேமசிறி தேரர், வண. திம்புல்கும்புறே விமலதம்ம தேரர், வண. யட்டிராவன சீலானந்த தேரர் உள்ளிட்ட தேரர்களும், அமைச்சர்களான விஜேதாஸ ராஜபக்ஷ, தயா கமகே, மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## கொக்குவிலில் கைது செய்யப்பட்டவர் ஆவா குழுவின் துணைத் தலைவராம்!

கொக்குவிலில் நேற்று முன்தினம் காலை சிறப்பு அதிரடிப்படையால் கைது செய்யப்பட்ட இளைஞன், ஆவா குழுவின் துணைத் தலைவராகச் செயற்பட்டவர் என்று பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொக்குவில் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, ரவீந்திரன் தருசன் என்ற இளைஞனை சிறப்பு அதிரடிப்படையினர் கைதுசெய்திருந்தனர்.

அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், கொக்குவிலில் கடந்த மாத இறுதியில் பொலிஸார் இருவர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் மற்றும் ஆவா குழுவால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் இவர் பங்கெடுத்திருந்தார் என்று தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தருசன், தனது சகாக்கள் கைது செய்யப்பட்டமையை அடுத்து, வேறோர் இடத்துக்குத் தப்பிச் சென்றிருந்தார். நேற்று முன்தினம் அதிகாலை இவர் கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கைதுசெய்யப்பட்டார்.

கொக்குவில் வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குழுவின் தலைவரான நிசா விக்டர் உள்ளிட்ட எட்டுபேர், ஏற்கனவே கைது செய்யப்பட் டுள்ளனர்.

அதேவேளை, சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி லதீப்பின் நேரடி கண்காணிப்பின்கீழ்,சிறப்புகுழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழ் மக்களுக்காக சாவதற்கு பயப்படேன்; கிழக்கில் வாக்குகளைப் பெற்றவர்கள் எங்கே?



சுமணரத்ன தேரர் ஆவேசம்!

மட்டக்களப்பு, ஒக. 17

தமிழ் மக்களைத் தமது சுய உரிமையுடன் வாழவிடுங்கள். அவர்கள் அனுபவித்த துன்பங்கள் போதும் இவர்களுக்காக நான் சாவதற்கும் பயப்படமாட்டேன் என மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் இந்த அப்பாவி மக்களின் வாக்குகளைப் பெற்ற அரசியல் வாதிகள் எங்கே? ஏன் இந்த அப்பாவி மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் முன்வரவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது விசேடமாக மட்டக்களப்பில் இடம்பெறும் காணி அபகரிப்பு அதிலும் இன்று அனைவராலும் பேசப்படும் வாழைச்சேனை முறாவோடை பிரதேசத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களின் சொந்தக் காணி, பத்திரமுள்ள காணிகளைச் சூறையாடுவதும் பாடசாலை மைதானத்தில் அத்துமீறிய குடியேற்ற சம்பவத்தையும் கண்டித்தே அந்தப் பிரதேச மக்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த விடயத்தை நான் எனது கையில் எடுத்தேன். அதனால் பெரிய மிரட்டல்களுக்குத் தற்போது முகம் கொடுத்து வருகின்றேன். நாங்கள் கலவரத்தை உண்டு பண்ணவில்லை. இவ்வளவு காலமும் எமது உண்மையான கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காத பட்சத்தில் நாங்கள் இந்தப் போராட்டத்தைத் தொடர்வோம்.

சிறுவர்கள் கல்வி கற்கும் இடத்தில் - தங்களது திறமைகளை வெளிக் கொண்டுவரும் மைதானத்துக்கு நடுவில் - வீடு கட்டியுள்ளனர். இந்த மைதானத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வீட்டை உடனடியாக அகற்றவேண்டும் என்று இங்குள்ள தாய்மார்கள், தந்தைமார்கள், சிறுவர்கள் என அனைவரும் வீதியோரத்துக்கு வந்து கூறினோம். எமது பாடசாலையையும் எமது காணிகளையும் மீட்டுத் தாருங்கள் என்றும் நாங்கள் தெரிவித்தோம்.

இந்த நாட்டை ஆளும் அரசியல்வாதிகளதும் அரச அதிகாரிகளதும் அசமந்தப் போக்கே இன்று நாம் போராடுவதற்கான காரணம். இந்த மக்கள் ஒரு மாதத்தில் 3 தடவை அரச அதிபரையும், 3 தடவை காணி ஆணையாளரையும், 4 தடவைகள் பிரதேச செயலரையும், 5 தடவைகள் கிராமசேவகரையும் சந்தித்துள்ளனர். நான்கு தடவை மட்டக்களப்பு உயர் பொலிஸ் அதிகாரி யாகொட ஆராச்சியை சந்தித்தனர். இந்த பாவப்பட்ட தமிழ் மக்களை எல்லோரும் ஏமாறியுள்ளார்கள்.

நான் பயமில்லாமல் விகாராதிபதி என்ற அடிப்படையில் கூறுகின்றேன். கடந்த சில நாள்களுக்கு முன் அரச அதிபரின் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் இந்த அப்பாவி மக்களின் உண்மை நிலையை அறிந்த பொலிஸ் உயர்அதிகாரி உடனடியாக காவலரணை அமைப்பதாக உறுதியளித்து ஒரு மாதம் முடிந்து விட்டது. எங்கே காவலரண் இந்த அப்பாவி தமிழ் மக்களை பொலிஸ் உயர் அதிகாரி ஏமாற்றியுள்ளார்.

இதன் பிரதிபலனாக காணி அபகரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் அவர்களது அபகரிப்பு வேலையை தொடர்ந்து நடத்திக்கொண்டு இருக்கின்றனர். அப்பாவித் தமிழ் மக்கள் வீதியில் இருக்கின்றனர்.

அப்படி என்றால் எங்கே கிழக்கு மாகாணத்தில் இந்த அப்பாவி மக்களின் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்? எங்கே? ஐக்கிய தேசியக் கட்சி? எங்கே? சுதந்திரக் கட்சியினர் எங்கே? அரசியல் வாதிகள் எங்கே ஏன் இந்த அப்பாவி மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் முன்வரவில்லை?.

இந்த மக்கள் முப்பது வருட யுத்தத்தில் பெரிய இன்னல்களை அனுபவித்தவர்கள். இவர்களைத் தங்களது சுய உரிமையுடன் வாழவிடுங்கள். இவர்கள் அனுபவித்த துன்பங்கள் போதும். இவர்களுக்காக நான் சாவதற்கும் பயப்படமாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை, முறாவோடை பாடசாலை மைதானத்தை அத்துமீறி அபகரித்து குடிசை அமைத்துள்ளமையைக் கண்டித்து மட்டக்களப்பு சிங்கள-தமிழ் இனத்தின் விழிப்புணர்வுக்கான அமைப்பின் தலைவர் மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தலைமையிலான போராட்டம் இடம்பெற்றது. சுமணரத்ன தேரர் தலைமையில் தமிழ், சிங்கள பொது மக்கள் இணைந்து நேற்றுமுன் தினம் மைதானத்தை முற்றுகையிட்டமையை அடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த பாடசாலைக்குச் சென்று, அங்கு அமைக்கப்பட்ட வேலிகளைக் கழற்ற முற்பட்டனர்.

இதனையடுத்து, கலகம் அடக்கும் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டகாரர்களுக்கும் இடையே பெரும் வாக்குவாதம் இடம்பெற்றதுடன் ஆர்ப்பாட்டக் காரர்கள் அதனையும் மீறி வேலியைக் கழற்ற முற்பட்டனர். இதனையடுத்து பொலிஸார் அவர்கள் மீது தடியடி பிரயோகம் செய்தனர். இதில் பெண்கள் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, பொலிஸார் மீது ஆர்ப்பாட்டகாரர்கள் கல் வீச்சு நடத்தியமையையடுத்து பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைத்தனர். இதனை யடுத்து அங்கு சில மணிநேரம் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

தொடர்ந்து அங்கு மேலதிகமாக கலகம் அடக்கம் பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அத்துடன், மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், கிழக்கு மாகாண காணி ஆணையாளர் ஆகியோர் வருகைதந்து ஆர்ப்பாட்டகாரர்களுடன் பேச்சில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் அதிகாரத்தைக் கைப்பற்ற சுதந்திரக் கட்சியினரும் களத்தில்!

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியொன்றை அமைப்பதற்குத் தேவையான வியூகங்களையும், கலந்துரையாடல்களையும் நாங்கள் முடுக்கி விட்டுள்ளோம் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் சம்மேளனக் கூட்டம் அதன் தலைவர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தலைமையில் நேற்று முன்தினம் மாலை கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஹிஸ்புல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுதந்திரக் கட்சி மைத்திரி அணி - மஹிந்த அணி என இரண்டாகப் பிளவுபட்டு போட்டியிட்டால் அது எமக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எனவே, கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு தரப்பும் ஒற்றுமைப்பட்டு செயலாற்றவுள்ளோம்.

பதவிக்காலம் நிறைவடையும் கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளினதும் நிர்வாக காலத்தை நீடிக்காது அதனை கலைத்து விட்டு மாகாண சபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

அது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எடுத்துரைத்துள்ளோம். நாங்கள் விரைவில் எதிர் கொள்ளவுள்ள மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலுக்குத் தயாராக வேண்டும்.

இந்தத் தேர்தல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு மிகுந்த சவால் மிக்கதாக அமையும். சவால்களை முறியடித்து எவ்வாறு வெல்வது என்பது குறித்து நாங்கள் இப்போதே ஆராய வேண்டும்.

சவால்கள் நிறைந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியொன்றை அமைப்பதற்குத் தேவையான வியூகங்களையும், கலந்துரையாடல்களையும் நாங்கள் முடுக்கி விட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மட்டக்களப்புக்கு விஜயம்; அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மட்டக்களப்பு விஜயத்தின் போது 55 கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன என்றும் சில திட்டங்கள் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன எனவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்புக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20 ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளார். அவர் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் காலை 10 மணியளவில் ஆரம்பமாகவுள்ளன.

ஏறாவூரில் 12 கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நகர சபைக் கட்டடம் பிரதமரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏறாவூரின் வாவிக்கரை பூங்காவை அண்மித்த பகுதியில் 10 கோடி ரூபா செலவில்



அமையப் பெறவுள்ள சுற்றுலா பொழுதுபோக்கு விற்பனை மற்றும் தகவல் மையத்திற்கான அடிக்கல் என்பனவும் நடப்படவுள்ளன.

அத்துடன், ஆரையம்பதியில் 10 கோடி ரூபா செலவில் அமையப் பெறவுள்ள ஒருங்கிணைந்த சுற்றுலாத் தகவல் மையம் மற்றும் வர்த்தகக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு என்பனவும் அவரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இதேவேளை, அமையவுள்ள சுற்றுலாத் தொகுதியில் பயிற்சி மையங்கள் மற்றும் கலாசார மையங்களும் அமைக்கப்படவுள்ளன என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (க)

# ஈழ அகதிகள் தாயகம் திரும்ப கப்பல் சேவைக்கு அனுமதி கோருகின்றது தமிழ்நாடு அரசு!

கொழும்பு, ஒக. 17

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் தன்னார்வ அடிப்படையில் நாடு திரும்புவதற்கு வசதியாக, இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு, தமிழ்நாடு அரசு கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமிழ்நாடு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் நடந்து வந்த பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் புதிய முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், கப்பல்துறை பணியகம் மற்றும் தமிழ்நாடு அரசின் அதிகாரிகளுக்கிடையில் கடந்த பெப்ரவரி மாதம் இது தொடர்பான ஒரு கூட்டம் நடைபெறவிருந்தது. எனினும், அரசியல் குழப்பங்களால் இந்தக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

இந்த நிலையில், நாடு திரும்பி மீளக் குடியேற விரும்பும் அகதிகளுக்கு உதவும் வகையிலான அறிக்கை ஒன்றுடன், கடிதம் ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு




அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவையையா அல்லது, இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவையையா அகதிகள் விரும்புகிறார்கள் என்று தீர்மானிக்க முன்னர், மத்திய அரசுடன் கலந்துரையாட வேண்டியுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டில் நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியிருக்கிறது. முகாம்களில் உள்ள அகதிகள் இங்கிருந்து செல்லும் போது தமது உடைமைகளையும் கொண்டு செல்லவே விரும்புகின்றனர்.

தாம் திரும்பும் போது, கப்பலில் தமது உடைமைகளை எடுத்துச் செல்லவே பெருமளவானோர் விரும்புகின்றனர் என்று வதிவிடமற்ற தமிழர்களின் புனர்வாழ்வு மற்றும் நலன் புரி ஆணையாளர் பி.உமாநாத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாத கணக்கின்படி, தமிழ்நாட்டில் 62 ஆயிரத்து 629 இலங்கை தமிழ் அகதிகள், 107 முகாம்களிலும், 36 ஆயிரத்து 794 பேர் முகாம்களுக்கு வெளியிலும் வசிக்கின்றனர் என்றும் அதிகாரபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.

# மஹிந்த குடும்பத்துக்கு எதிரான விசாரணை தீவிரப்படுத்த அமைச்சரவையில் அழுத்தம்!



கொழும்பு, ஒக. 17

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் முன்னைய அரசின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையில், தேவையற்ற இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என, நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் காரசாரமான கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், பல அமைச்சர்களும் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தனர்.

இதன்போது ஐ.தே.க . அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா கருத்து வெளியிடும்போது -

உயர்மட்ட ஊழல்கள் மற்றும் குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்க அரசமைப்பில் இடமில்லை என்றால், தற்போதுள்ள நீதிமன்றங்களின் ஊடாக இதனைக் கையாள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திலக் மாரப்பன, சம்பிக்க ரணவக்க, சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பெரும்பாலானோர் இந்தக் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்குகளை சரியான முறையில் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்போது நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, தம்மால் நீதித்துறையில் தலையீடு செய்ய முடியாது என்று பதிலளித்துள்ளார்.

# நல்லாட்சி அரசு தூய்மையானது: பிரதி அமைச்சர் நிசாந்த தெரிவிப்பு!



இந்த அரசு மிகத் தூய்மையானதும், தெளிவானதுமாகும் என பிரதி அமைச்சர் நிசாந்த முத்து ஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்கவா அரசு ராஜபக்ஷக்களை விசாரணை செய்கின்றது என ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசுகளின் தனது அமைச்சர் ஒருவரான ரவி கருணாநாயக்கவை பணி நீக்கியது, அவர் அதை ஏற்று பதவி விலகி வீடு சென்றமை அரசின் தூய்மைத் தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

கடந்த அரசின் ஊழல் மோசடிகள் பற்றிய விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. இது குறித்த வழக்கு விசாரணைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய வழக்கு விசாரணை செய்து, நிதி மோசடி விசாரணைப் பிரிவு போன்ற பிரிவுகளால் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த விசாரணைகளுடன் அரசைத் தொடர்புபடுத்த முடியாது. இவை அனைத்துமே நீதிமன்றின் செயற்பாடுகளாகும்.

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு வரையில் அரசில் எவ்வித மாற்றங்களும் செய்யப் படமாட்டா. அரசு சரியான பாதையில் முன்நகர்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசு தயாராகிறது!

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது என சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உத்தேச அரசமைப்பு தயாரிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அதனை நிறைவேற்றிக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளார்.

இதன்படி ஏனைய தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னதாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஒருவரை மையப்படுத்தியுள்ள அதிகாரங்கள் நாட்டின் ஏனைய மனிதர்களுக்கும் பிரிந்து செல்லக்கூடிய வகையில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவோம்.

அரசமைப்புப் பேரவையில் விமல் வீரவன்சவின் கட்சியைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

விரைவில் அரசமைப்பு வரைவுத்திட்டம் உருவாக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# இலங்கையின் பாதுகாப்பில் இந்தியாவுக்கு மிக அக்கறை!

இலங்கையின் பாதுகாப்பின் மீது இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 71 ஆவது சுதந்திர நாளை முன்னிட்டு, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் பாதுகாப்பின் மீது இந்தியா மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது. இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது.

பல மொழி, பல்லின, பல



சுதந்திரதின நிகழ்வில் இந்திய தூதுவர் சந்து

சமூகங்கள் வாழும் இலங்கையில் அனைத்து மக்களும், சமத்துவம், பாதுகாப்பு, நல்லிணக்கத்துடன், வாழ்வதற்கான முயற்சிகளுக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்து வந்துள்ளது.

இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இந்தியா ஈடுபடும்.

உட்கட்டமைப்பு, உற்பத்தி, சுகாதாரம், கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற துறைகளும் முதலீடுகளுக்கும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். இந்தியாவின் பெறுமதிமிக்க பங்காளர்களில் இலங்கையும் ஒன்று.

கடல்வழிப்பாதையின் பாதுகாப்பு உள்ளிட்ட பொதுவான பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வலுவான ஒத்துழைப்பு பேணப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

# ‘நாட்டுக்கூத்து’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 17

புலவர் இன்னிசை கவி மணி பெஞ்சமின் கிறிஸ்தோப்பரின் ஞான சௌந்தரி நாட்டுக் கூத்து நூல் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாஷையூர் பங்கு மண்டபத்தில் கலாபூஷணம் பி.யூல்ஸ் கொலின் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக தேசிய ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியும், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார், பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து பாடல்கள் பாஷையூர் கூத்தாளிகளினால் இசைக்கப்படும். நூலின் நயப்புரையை யோசப் பாலா நிகழ்த்துவார்கள்.

(இ-19)

## தினசரி ராசி பலன் 17.08.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் முதலாம் நாள் தசமித்திதி பகல் 12.43 மணி வரை. பின்னர் ஏகாதசி. நட்சத்திரம். மிருகசீரிடம் இரவு 10.59 மணி வரை. பின்னர் திருவாதிரை. மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 1.47 மணி முதல் 3.20 மணி வரை. சுபநேரம்: காலை 7.35 மணி முதல் 9.05 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: திதி இல்லை. பிறந்த நட்சத்திர வழிபாடு: மிருகசீரிடம்.**

‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** இன்பமான நாள். தாராள பணவரவும், எடுத்த காரியங்கள் தடையின்றி நடைபெறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உத்தியோக ரீதியாக புத்திரர் பிற நாடு செல்கின்றமை மதிப்பை உயர்த்தும்.

**ரிஷபம் :** இணக்கமான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். வெளிவட்டாரத்தில் மதிப்பு உயரும். முயற்சிகள் யாவும் கைகூடிவரும்.

**மிதுனம்:** கவலையான நாள். குடும்பத்தில் பண முடை ஏற்படும். குடும்ப உறவில் விரிசல் உண்டாகும். சிலருக்கு உடன் பிறந்தவர்களால் மனக்கவலை ஏற்படும்.

**கடகம் :** யோகமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். காரியங்களில் வெற்றி, செயற்பாடுகளில் வேகமும், தெளிவும், மனதில் மகிழ்ச்சியும் நிலவும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தொழிலில் தடையுடன் கூடிய முன்னேற்றமும், முதலீடுகளில் தெளிவற்ற தன்மையும் நிலவும்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். பெரியவர்கள், மகான்களின் சந்திப்பும் ஆசியும் கிடைக்கும்.

**துலாம் :** துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண்சச்சரவுகள் உண்டாகும். வாகனங்களால் வீண் செலவுகள், ஆபத்துகள் ஏற்பட்டு விலகும்.

**விருச்சிகம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எல்லாக் காரியங்களிலும் தடைகளும் எதிர்ப்புகளும் நிலவும். பணத் தட்டுப்பாடு கவலையைத் தரும். பிறர் தலையீட்டால் வீண் விரோதம் ஏற்படும்.

**தனுசு :** இனிமையான நாள். பணவரவு தடையின்றி வருவதால் குடும்பத்தில் அமைதியும், வளர்ச்சியும் நிலவும். உடல் ஆரோக்கியம் திருப்தியாக இருக்கும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்:** சுபீட்சமான நாள். தனலாபம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவு பல காரியங்களை வெற்றிகரமாகச் செய்ய உதவும். குடும்ப உறவில் அன்னியோன்யம் காணப்படும்.

**கும்பம் :** யோசனையான நாள். பணம்பற்றாக்குறையாக இருக்கும். உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைக்க நேரிடும். திருமண காரியங்களில் அலைச்சல், மனக்கவலை ஏற்பட்டு விலகும்.

**மீனம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவிற்கு முன் செலவினங்கள் காத்திருக்கும். புத்திரர்களால் செலவுகள் அதிகமாகும். உத்தியோகத்தில் வேலைச் சுமையுடன், வருவாய் திருப்தி அளிக்காது.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால் அனுஷம் கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# இறைவன் உடலையல்ல ஒவ்வொருவரின் உள்ளத்தைத் தான் நோக்குகின்றார்

### மடுத்திருப்பதி பெருவிழா திருப்பலி வேளையில் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மறையுரை



- மன்னார் செய்தியாளர்:- வாஸ் கூஞ்ஞ -

இந்த உலகத்திலே நாம் எமது உடலை எவ்வளவாக போற்றுகின்றோம். பல செலவுகள் செய்து அழகு படுத்துகின்றோம். ஆனால், இறைவன் உடலையல்ல உள்ளத்தைதான் நோக்குகின்றார். ஆகவே, இறைவனின் திட்டத்தில் நாம் வாழ வேண்டும். அவரின் திட்டத்துக்கு மாறாக நாம் வாழ்ந்தால் இந்த விண்ணேற்பு எமக்கு கிடைக்காது என யாழ். மறைமாவட்ட ஓய்வுபெற்ற ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மடுத்திருப்பதி பெருவிழாவில் திருப்பலி வேளையில் மறையுரை ஆற்றும்போது ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் தொடர்ந்து உரையாற்றுகையில்–

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்திருக்கும் நாம் அனைவரும் இந்தப் பதியில் ஒரே குடும்பமாக ஒன்று கூடியுள்ளோம். திங்கட்கிழமை பெருவிழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கான சகல ஆயத்தங்களையும் செய்திருந்தோம்.

**திடீரென கருமுகில்; கொட்டியது மழை!**

ஏராளமான மக்கள் விசுவாசத்துடன் இங்கு கூடியிருந்தார்கள். ஆனால், திங்கட்கிழமை இரண்டு மணியளவில் திடீரென கரும் முகில் வானத்தில் தோன்றியது. பின் கொட்டியது பலத்த மழை. மக்கள் அவதிப்படுகின்றனரே தங்குவதற்கு இவர்களுக்கான இடங்கள் இல்லையே என நாங்கள் சிந்தித்தவர்களாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம்.

ஆலயங்களை திறந்து இவர்கள் எங்கெல்லாம் தங்குவதற்கு இடம்இருந்ததோ அங்கெல்லாம் தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பெருந்தொகையான மக்களுக்கு ஒதுங்குவதற்கு எங்கே இடம் இங்கே வெள்ளம் ஆலயத்தைச் சூழ்ந்தமையால் அன்றைய மாலை வழிபாட்டை நடத்த முடியாது என தீர்மானித்தமையால் அன்று ஆலயத்துக்குள் விசேட ஆராதனையை நடத்தினோம்.

இவ்வளவு காலமும் மழை இல்லாமல் வறண்டுபோய் இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து நான் இங்கு வரும் பொழுது ஒரு புல்பூண்டுகளையும் காண முடியவில்லை. ஆனால், இங்கு மழை பெய்து வெள்ளமாக காட்சியளித்தது. இதனால் மக்கள் பல அசௌரியங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இச் சம்பவம் ஏன் இடம்பெற்றது என நீங்கள் சிந்திக்கலாம்.

**அன்னை கைவிடவில்லை**

மருதமடு அன்னை எப்பொழுதும் எங்களுக்கு உதவி செய்கின்றவள். எங்கள் தேவைகளை உணர்ந்து எமக்கு உதவி செய்கின்றவள். நேற்று (கடந்த திங்கட்கிழமை) நாங்கள் கலங்கியிருந்தபோதும் அன்னை எங்களை கைவிடவில்லை. அவளுடைய அருள் எம்மோடு எப்பொழுதும் உள்ளது.

ஆனால், மழை ஓய்ந்தது இன்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) நாம் இப்பெருவிழாவை கொண்டாட முடிந்தது. இதனால், அன்னையின் புகழ் மேலும் ஓங்குகின்றது. திங்களன்று நடந்த இச் சம்பவம் போல்தான் எமது வாழ்க்கையையும் இறைவன் செயற்படுத்துகின்றார்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது சொந்த வாழ்க்கையில் துன்பப்படும்போது மரியன்னை இறைவனிடம் பரிந்துபேசி சகல நன்மைகளையும் செய்கின்றாள். அன்னையின் விண்ணேற்பு விழாவின் பொருள் என்ன? மரியன்னையின் உடலானது அவளுடைய சரீரமாக இறைவனால் எடுக்கப்பட்டது.

**மகிழ்ச்சியுடன் கொண்டாடும் விண்ணேற்பு விழா**

அன்னையின் உடல் அழிவுக்கு உட்படவில்லை அது பாதுகாக்கப்பட்டது. இதைத்தான் நாம் இந்த விண்ணேற்பு விழாவில் மகிழ்ச்சியாக கொண்டாடுகின்றோம். இறைமகன் இயேசு அன்னைக்கு கொடுத்த விசேட உதவியாகும்.

மரியன்னையின் இந்த விண்ணேற்பு விழா எம் உடலைப் பற்றி எடுத்தியம்புகின்றது எமது உடல் ஒரு நாளைக்கு மண்ணோடு மண்ணாகத்தான் போகிறது. ஆனால், இறைவனோடு ஒன்றிப்போம் என்ற நம்பிக்கையை ஊட்டிநிற்கின்றது. நாம் அழிந்து போக மாட்டோம். அழிவுக்கு உட்பட மாட்டோம் நாம் இறைவனோடு வாழ்வோம்.

இந்த உலகத்திலே நாம் எமது உடலை எவ்வளவாக போற்றுகின்றோம். பல செலவுகள் செய்து அழகு படுத்துகின்றோம் ஆனால், இறைவன் உடலையல்லஉள்ளத்தைத்தான் நோக்குகின்றார். ஆகவே, இறைவனின் திட்டத்தில் நாம் வாழ வேண்டும். அவரின் திட்டத்துக்கு மாறாக நாம் வாழ்ந்தால் இந்த விண்ணேற்பு எமக்கு கிடைக்காது.

இந்த விண்ணேற்பு விழாவை நாம் கொண்டாடுகின்றபோது நமக்கு விடுக்கப்படும் அழைப்பு என்ன? இறைமகன் சொல்வதையெல்லாம் செய்யுங்கள். இதைத்தான் கானாவூர்கலியாணவிருந்திலே அவள் செய்தாள். அங்கு நடைபெற்ற திருமணம் மாண்பு பெற்றது.

மரியன்னை எம்பொழுதும் எம்மோடு இருந்து பயணிக்கின்றாள் துன்ப வேளையில் எமக்கு கரம் கொடுத்து தூக்குகின்றாள். நாம் அம்மா தாயே என்று கூவும்போது எமக்கு அபயம் நிச்சயம் உண்டு.

(இ-112)

# வவுனியாவில் பதிவுசெய்யப்படாத வைத்தியசாலையில் சோதனை

## மருந்துகளும் கைப்பற்றப்பட்டன

வவுனியா - சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இயங்கிவந்த பதிவு செய்யப்படாத வைத்தியசாலை ஒன்று சுகாதார பிரிவினரால் சோதனையிடப்பட்டு அங்கிருந்த மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.லவன் தலைமையிலான குழுவினரே இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த வைத்தியசாலை சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை. அத்துடன் அங்கிருந்த மருந்துகள் எந்த வகையைச் சேர்ந்தவை என்பது தெரியாது எனக் குறிப்பிட்ட சுகாதார வைத்திய அதிகாரி லவன் இங்கு கைப்பற்றப்பட்ட மருந்துகள் அனைத்தும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன. அவை பரிசோதனைகளுக்காகவும் அனுப்பிவைக்கப்படும் எனவும் கூறினார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட வைத்தியசாலையின் மருத்துவர் கே.கோகுல்ராஜ் கருத்து தெரிவிக்கையில் -

‘‘எனது வைத்தியசாலை ஹோமியோபதி வைத்திய நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. வர்த்தமானியில் பெயர் இருக்கின்றது. கிளிநொச்சி மற்றும் குருநாகல் போன்ற பகுதிகளிலும் எமது ஹோமியோபதி வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன. சுகாதாரத் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைக்கு முகங்கொடுக்க நாம் தயாராக இருக்கின்றோம்’’. என்றார்.

(ம-100)

# ஓடித் திரிந்தவர்களை சோம்பேறிகளாக்கி விட்ட சமூக வலைத்தளங்கள்!



இன்று தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி மக்களிடையே பல தாக்கங்களை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைப் போக்கையே மாற்றி வருகின்றன. இதில் தொலைக்காட்சி, கணினி, கைபேசி இவற்றின் பங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

உலகின் பல்வேறு நிகழ்வுகளை உடனுக்குடன் துல்லியமாக அறிய ஊடகங்கள் பெரிதும் உதவுகின்றன என்றாலும், இவை குடும்ப வாழ்வையும், தனி மனித வாழ்வையும் சீரழித்து வருகின்றன.

முன்பெல்லாம் செய்திகளை தண்டோரா போட்டு அறிவித்தார்கள். பின்னர் வானொலி வந்தது. பிறகு அரச தொலைக்காட்சி வந்தது. அதன் பிறகு தனியார் தொலைக் காட்சிகள், கைபேசிகள் வந்து உலகச் செய்திகளை உடனுக்குடன் விரல் நுனியில் கொண்டு வந்து விட்டன.

இணையம் வழியாக சமூக வலைதளங்கள் நம் வாழ்வின் ஓர் அங்கமாக மாறி விட்டன. உலகத்தின் நிகழ்வுகளை வீட்டில் அமர்ந்தவாறே காண இணைய பயன்பாடு பெரிதும் உதவுகிறது. உலகம் சுருங்கிவிட்டது.

## பெருகி வருகின்றன குற்றங்கள்

குறிப்பாக, முகநூல், கட்செவி அஞ்சல், சுட்டுரை போன்ற வலைத் தளங்கள் இன்று அனைவராலும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய சமூக வலைத் தளங்களால் குற்றங்கள் பெருகி வருகின்றன என்பதை மறுக்க இயலாது.

பொழுது போக்கிற்கான பல சமூக வலைத்தளங்கள் மக்களின் நேரக் கொல்லிகளாக மாறி விட்டன. நேரம் கிடைக்கும் போதெல்லாம் இணையத்தைப் பயன் படுத்தும் நிலை மாறி இணையத்திலேயே நேரத்தைக் கழிக்கின்ற நிலை இன்று உருவெடுத்துள்ளது.

சமூக ஊடகங்கள் சுறுசுறுப்பாக இருந்த மக்களை வீட்டிற்குள்ளே கட்டிப் போட்டு சோம்பேறிகளாக்கி விட்டன. ஒரு மனிதன் நல்ல உடல் நிலையில் இருக்க வேண்டுமானால் அவன் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் ஏழு மணிநேரமாவது தூங்க வேண்டும் என்று மருத்துவ அறிவியல் சொல்கிறது. ஆனால், இந்தச் சமூக ஊடகங்கள் பலரின் தூக்கத்தை கெடுத்து உடல் நலத்தை பாதித்து விடுகிறது.



அறிதிறன்பேசி எனப்படும் ஸ்மார்ட் போனை பயன்படுத்துபவர்கள் மூன்று மணி நேரம் தூங்குவது என்பதே அரிதாக உள்ளது.

## பணமும் நேரமும் வீணடிப்பு

இவர்கள் இரவு 10 மணிக்கு மேல் முகநூலில் வீடியோ பதிவுகளையும், வதந்திகளையும், அவதூறு செய்திகளையும் அனுப்பி அதில் எவ்வளவு லைக்ஸ் எனப்படும் விருப்பம் வந்துள்ளது, எவ்வளவு பேர் இந்த வதந்திகளை மற்றவர்களுக்கு பகிர்ந்திருக்கிறார்கள் என்பதை இரவு முழுவதும் பார்த்து காலம் போவதே தெரியாமல் பணத்தையும், நேரத்தையும் வீணடிக்கிறார்கள்.

டாக்டர் அப்துல் கலாம், இன்றைய இளைஞர்களிடம் கனவு காணுங்கள் என்றார். ஆனால், இவர்களுக்கு தூக்கம் வந்தால் தானே கனவு காண்பதற்கு.

இன்றைய இளைஞர்கள் ஒருவித பதற்றம், பய உணர்ச்சி, யாரைக் கண்டாலும் எரிச்சல், பெற்றோர்களை எதிர்த்துப் பேசுவது, கோபப்படுவது, எதிலும் ஆர்வமின்மை, மன அழுத்தம், மனச்சோர்வு, கவனக் குறைவு, மறதி போன்றவைகளால் துன்பப்படுகிறார்கள்.

எப்போதும் சமூக வலைதளங்களையே பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும், பேசிக் கொண்டிருப்பவர்களுக்கும் வெளியில் அவர்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது தெரியாமல் போகிறது.

விருப்பமானவர்களிடமிருந்து தகவல் வரவில்லையென்றால், மேலும் துயரமடைந்து ஒருவித மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள் என்றும், தூக்கம் வராத வியாதிக்கு உட்படுவார்கள் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

## உடல் நலத்தில் மாற்றம்

மேலும், கண் எரிச்சல், கண் அழற்சி, கண் பொங்குதல், கண்களைச் சுற்றி கருப்பு நிறத் திட்டுகள் ஏற்பட்டு அவர்கள் உடல் நலத்தில் மாற்றம் ஏற்படும் எனவும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். அறிதிறன்பேசிகளின் பயன்பாடுகள் மூலம் ஏற்படும் பாதிப்புகளை நோமோபோபியா (No-mophobia) என்று அழைக்கிறார்கள்.

சமூக ஊடகங்கள் குழந்தைகளையும் விட்டு வைப்பதில்லை. காட்சி ஊடகங்கள் குழந்தைகளை நுகர்வோர்களாக மாற்றி விட்டன.

கலை, அறிவியல், விளையாட்டு என்பது இன்று வசதிபடைத்தவர்களுக்கும், சாதிக்கத் துடிப்பவர்களுக்குமே என்றாகி விட்டது.

இதனால் பல இளைஞர்கள் அறிதிறன் பேசியிலும், கணினியிலும் விரலசைவுகளினால் விளையாடி, தங்களின் காலத்தை வீணடித்துக் கொள்கிறார்கள். சாதனை படைத்தவர்கள் இவ்வாறு நேரத்தை வீணடிப்பதில்லை என்பதை இளைஞர்கள் உணர வேண்டும்.

தொலைக்காட்சி நெடுந்தொடர்கள் பெண்கள் மனதை சீரழித்து வருகின்றன. இந்த நெடுந்தொடர்களில் வரும் கற்பனை கதாபாத்திரங்கள் உண்மையென நம்பி, அந்த கொடூர கதாபாத்திரமாக தங்களையும் மாற்றி தங்களின் வாழ்க்கையில் நிம்மதியை இழக்கிறார்கள்.

பெரும்பாலான தொலைக்காட்சிகள் தங்களது நெடுந்தொடர்களில் பெண்களுக்கு எதிரான விடயங்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. சமூக ஊடகங்கள் நட்பு வட்டாரத்தை விரிவுப்படுத்துகிறேன் என்று பல தீய நட்புகளைத்தான் வளர்க்கும்.

இதனால், நமக்கும், சமூகத்திற்கும் எந்தப் பலனும் இல்லை என்பதை உணர வேண்டும். இந்த தொலைக்காட்சி, கைப் பேசி, கணினி, போன்றவற்றை அளவோடு பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் வாழ்வில் அமைதி நிலவும்.

சமூக ஊடகங்களை பயன்படுத்துவோர் நெருப்பில் குளிர் காய்வது போல அதிகமாக நெருங்கி விடாமலும், அதிகமாக நீங்கி விடாமலும் இருக்க வேண்டும். ★

*நன்றி:இணையம்*

> இன்றைய இளைஞர்கள் ஒருவித பதற்றம், பய உணர்ச்சி, யாரைக் கண்டாலும் எரிச்சல், பெற்றோர்களை எதிர்த்துப் பேசுவது, கோபப்படுவது, எதிலும் ஆர்வமின்மை, மன அழுத்தம், மனச்சோர்வு, கவனக் குறைவு, மறதி போன்றவைகளால் துன்பப்படுகிறார்கள்.



காலைக்கதிர் Kalaikkathir



# "ஓ! அமெரிக்கா …!! எங்கே போகிறாய்…?"

263

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

வட கொரியாவின் ICBM கள் என்றழைக்கப்படுபவை செல்லக் கூடிய தூரம் துல்லியத்தன்மை சுமக் கும் குண்டுகளின் எடையளவு பூமி யின் சூழலுக்குள் மீண்டும் நுழைந்து தப் பித்திருக்கக்கூடிய திறன் என அவை குறித்துக் கூறப்படும் ஒவ் வொன்றின் மீதும் கேள்விகள் தொக்கி



நிற்கின்றன.

வட கொரியா உடனான ஒரு போரின் விளைவாக ஏற்படக்கூடிய மிகப் பெரும் உயிரிழப்புகள் குறித்து ட்ரம்ப் முற்றிலும் அலட்சியமாக உள் ளார். அந்த மோதல் கொரிய தீபகற் பத்திற்கு உள்ளேயே மட்டுப்பட்டு இருந்தாலும் கூட, மில்லியன் கணக் கானவர்கள் அதில் கொல்லப்படுவார் கள். ஒரு மதிப்பீட்டின்படி, அந்த சண் டையின் ஆரம்ப ஒருசில மணிநேரங் களில் தென் கொரிய தலைநகரம் சியோல் மக்கள்தொகையில் மட்டுமே மில்லியன் கணக்கானவர்கள் பாதிக் கப்படுவார்கள்.

**வட கொரியா அதன் ஏவு கணை பரிசோதனைகளை நிறுத்தாவிட் டால்-வேறு வார்த் தைகளில் கூறுவதானால், அமெ ரிக்க கோரிக்கைகளுக்கு முழு மையாக அடிபணியாவிட் டால், போர் தவிர்க்கவியலாதது என்று கிரஹாம் அறிவித்தார்.**

NBC "Today" நிகழ்ச்சியில் கடந்த வாரம் பேசுகையில், வலதுசாரி குடியரசு கட்சி செனட்டர் லிண்ட்செ கிரஹாம் ட்ரம்ப் சிந்தனை மீது சிலிப்பூட்டும் உட்பார்வையை வழங்கினார். கிம் ஜொங்-யுன் ஐ தடுப்பதற்கு ஒரு போருக்குள் இறங்க வேண்டியிருந் தால், அது அங்கேயே முடிந்துவிடும் என்றார். ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படுவார்களானால், அவர்கள் அங்கேயே கொல்லப்படுவார்கள். அவர்கள் இங்கே கொல்லப்படபோவ தில்லை- இதை அவர் என் முகத்திற்கு நேராக என்னிடம் கூறினார்.- என்றார்.

வட கொரியா அதன் ஏவுகணை பரிசோதனைகளை நிறுத்தாவிட்டால்- வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அமெரிக்க கோரிக்கைகளுக்கு முழு மையாக அடிபணியாவிட்டால் போர் தவிர்க்கவியலாதது என்று கிரஹாம் அறிவித்தார். ஒரு IBMS ஐ கொண்டு அவர்கள் தொடர்ந்து அமெரிக்காவைத் தாக்க முயன்றால், அவர்கள் ஏவுகணை திட்டத்தின் மீது வட கொரியாவுடன் ஒரு போர் நடக்கும். ட்ரம்ப் இதை என்னிடம் தெரிவித்துள்ளார், நான் அவரை நம்புகிறேன்- என்றார்.

ஆசியாவில் இந்த கடுமையான போர் அபாயம் வெறுமனே பாசிச வாத ட்ரம்ப் ஒருவரால் ஏற்பட்ட விளைவல்ல, மாறாக இது உலகளா விய மற்றும் அமெரிக்க முதலாளித் துவத்தின் ஆழ்ந்த மற்றும் தீர்க்க வியலாத நெருக்கடியின் வெளிப் பாடாகும். ஜனநாயக கட்சி மற்றும் குடியரசுக் கட்சியின் அமெரிக்க நிர் வாகங்கள், ஒருபோல அமெரிக்க முத லாளித்துவத்தின் நீண்டகால வீழ்ச் சியை மாற்றி, அதன் உலகளாவிய மேலாதிக்கத்தை நிறுவும் பெரும்பிர யத்தன முயற்சியில் இராணுவ ஆக் கிரமிப்பைப் புகலிடமாக ஏற்றுள்ளன.




மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும்மத்திய ஆசியாவில்நடத்தப்பட்ட அடுத்தடுத்த போர்கள், இப்போது உலகின் பிரதான பொருளாதார சக்தி களுக்கு இடையே ஒரு நேரடி மோதலாக ஒன்றுதிரண்டு வருகின்றன.

ஒபாமா நிர்வாகத்தின் ''ஆசிய முன் னெடுப்பானது'', வட கொரியாவிற்கு எதிரான அமெரிக்க அச்சுறுத்தல்களின் மத்திய இலக்கில் உள்ள சீனாவிற்கு எதிரான போர் தயாரிப்பில் இந்தோ- பசுபிக் எங்கிலும் ஒரு மிகப்பெரும் இராணுவ ஆயத்தப்படுத்தலை உள்ள டக்கி இருந்தது.

அமெரிக்கா ரஷ்யாவுடன் ஓர் இராணுவ மோதலுக்குத் தயாரிப்பு செய்து வரும் நிலையில், அது ஐரோப் பாவில் ஒன்று மாற்றி ஒன்றாக இரா ணுவ ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது. அதேவேளையில் ரஷ்யா அதன் சொந்த பரந்த போர் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

மத்திய கிழக்கில், அமெரிக்காவும் ரஷ்யாவும் இராணுவரீதியாக சிரிய மோதலின் எதிரெதிர் பக்கங்களில் ஈடுபட்டுள்ளன. இந்த வெடிப்பு- புள்ளிகளில் ஏதேனும் ஒன்று அணு ஆயுத சக்திகளுக்கு இடையிலான போருக்குத் தூண்டுதலாக அமைந்து விட்டால், அது பில்லியன் கணக்கான மக்களை இல்லையென்றாலும், மில் லியன் கணக்கானவர்களை கொன்று, நாம் அறிந்த நாகரிகத்தையே அழித்து விடக்கூடும்.


இந்த அசாதாரண பதற்றமான சூழல் அதீத ஆபத்தானது. உலகெங் கிலுமான தொழிலாளர்கள் ஏதாவது ஒருநாள் காலையில், வட கொரிய இராணுவ நிலைகள் மற்றும் தொழில் துறை மீது அமெரிக்கா பெரிய தாக் குதல்களை தொடங்கியது என்பதையும், சியோல் மற்றும் டோக்கியோவை தாக்கி பியொங்யாங் பதிலடி கொடுத் துள்ளது என்பதையும், சீனாவும் ரஷ் யாவும் மற்றும் ஏனைய பிரதான சக்தி களும் அவற்றின் அணு ஆயுதங்களை உயர் எச்சரிக்கை நிலையில் நிறுத்தி அவற்றின் சொந்த அச்சுறுத் தல்களை அறிவித்துள்ளன என்பதை யும் கேட்க எழவே முடியாத நிலையில் காண்பர்.

## இந்திய-சீன எல்லைப் போர் அபாயம்

ஓர் இராணுவ மோதல் தொடர்பாக அதிகரித்துவரும் எச்சரிக்கைகள் மற்றும் அச்சுறுத்தல்களின் மத்தியில் இமயமலை அடிவாரத்திலுள்ள ஒரு தொலைதூர மலைமுகட்டுப் பகுதி யான டோக்லாம் பீடபூமி குறித்து இந்திய மற்றும் சீன துருப்புக்கள் இடையே உருவான முட்டுக்கட்டை நிலை இன்னும் தொடர்கிறது.

இந்திய பாதுகாப்புதுறை அமைச்சர் அருண் ஜேட்லி புதன்கிழமை நாட் டின் நாடாளுமன்றத்தில், அதன் இராணுவம் எந்தவொரு சவாலையும் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும், மேலும் இந்தியா கற்றுக்கொண்ட 1962 ஆண்டு படிப்பினைகளால் 1965 மற்றும் 1971 இல் நடந்த போர் களில் பாகிஸ்தானுடனான அதன் வெற்றிகளால் ஏற்கனவே நிரூபிக்கப் பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

1962 இல் ஒரு மாதம் நீடித்த




சீன-இந்திய எல்லைப் போரில் பெய் ஜிங் புதுடில்லிக்கு ஒரு மூக்குடைத் தலை கொடுத்த பின்னர் அதன் துருப் புக்களை திரும்பப் பெற உத்தரவிட் டது பற்றிய ஒரு குறிப்பாக இது இருந்தது

பதற்றங்கள் அதிகரிப்பதற்கான இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பிரச்சினைக்குரிய அடையாள மாக, வெடிபொருள்கள் ஆயுத தளவா டங்கள் மற்றும் பிற போர் தளவாடங்கள் கொள்முதல் செய்வதைத் துரிதப்படுத்த இந்திய பாதுகாப்பு அமைச்சகம் (Indian Ministry of Defense –MoD) நிதி அமைச்சகத்திடமிருந்து கூடுதல் நிதி யாக 200 பில்லியன் ரூபாவை ($3.1 billion) அவசரமாக கோரியுள்ளது.

போரிடுவதற்குத் தேவைப்படும் வெடிபொருள்கள் மற்றும் உதிரிப் பாகங் கள் ஆகியவற்றிற்கான அவசர கொள் முதலை துரிதப்படுத்துவதற்கு இந்திய பாதுகாப்பு அமைச்சகம் இராணுவத் தளபதிகளுக்கான துணைத் தலைவர் லெப் டினன்ட் ஜெனரல் சரத் சந்திற்கு அதிகாரம் வழங்கிய கடந்த மாத அறி விப்பை இது பின்பற்றுகின்றது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



67




**அத்தியாயம் - V**

## எமது வீடு மீது தாக்குதல்

நாம் தப்பிய இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து ஒன்று தெளிவானது. பொட்டு அம்மானை நடமாடவிடாதபடி அவருடைய காயங்கள் அவரைக் கட்டுப்படுத்துவதை உணர்ந்தோம். வடமராட்சியில் புலிப் போராளிகளைத் தேடும் முயற்சியை இந்தியப் படையினர் தீவிரப்படுத்தியிருந்தமையால், சுற்றி வளைப்பும் தேடுதலும் அன்றாட நடவடிக்கையாயின. பொட்டு அம்மான் உயிர்பிழைக்க வேண்டும் என்றால், அவர் அந்த இடத்தை விட்டு வெளியேறி, மருத்துவப் பராம ரிப்பும் ஓய்வும் பெறுதல் அவசியமானது என்பதும் தெளிவாயிற்று. எனவே, அவரை மருத்துவ பராமரிப்புக்காக கடல் மூலம் தமிழ் நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடாயிற்று. இதனால் எமது குழுவை விட்டு அவர் பிரிந்து சென்றார். காயமடைந்திருந்த ஏனைய போராளிகளுக்கும் தனித் தனியான தொடர்புகளும் வழிகளும் கிடைத்தன. இவர்களும் தமக்கு உதவி புரிய முன் வந்தவர்களுடன் சிகிச்சைப் பராமரிப்பு வழிதேடி, வெளியேறினார்கள். உயிர் தப்பிப் பிழைக்கும் போராட்டத்தில் நாம் தொடர்ந்தும் ஈடுபட்டோம்.

இந்தியர்கள் எம்மைத் தொடர்ந்து தேடிய வண்ணம் இருந்தார்கள். நாமும் இடம் மாறியபடியே இருந்தோம். அந்தப் பகுதியின் அரசியற் பொறுப்பாளர் சுக்ளா என்பதால், இந்தியர் அவரையும் வேட்டையாட முயன்று கொண்டிருந்தார்கள். இதனால் புதிய பாதுகாப்பான வீடுகளை ஆயத்தப்படுத்துவதற்காக அவர் அடிக்கடி வெளியே செல்வதும் அவருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் போலப் பட்டது. அந்தப் பகுதி முழுவதும் அவருக்கு நன்கு பரிச்சயமாக இருந்ததால், அப்போதைக்கேனும் அகப்படாமல் இருப்பது அவருக்கு இயலுமாயிற்று. ஆனால், நெல்லியடி நகருக்குள் அவர் வெளிவாரியாக நடமாட முடியவில்லை. இந்தியப் படையினருக்குத் தங்கள் எதிரிகள் யார் யாரென்று அடையாளம் தெரியாது. ஆகவே, விடுதலைப் புலிப் போராளிகளையும் அவர்களுக்கு உதவுபவர்களையும் அடையாளம் காட்டுவதற்காக முகமூடி தரித்த உளவாளிகளை மக்கள் கூடுதலாக உள்ள பகுதிகளில் நிறுத்தியிருந்தார்கள். விடுதலைப் புலிப் போராளி என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை முகமூடி தரித்தவர் கண்டதும், அவர் பக்கமாகத் தலையை ஆட்ட படையினர் அவரைக் கைது செய்வர். இந்த உளவாளிகளைத் தமிழ் மக்கள் வெறுத்தார்கள். தலையாட்டிகள் என்று ஏளனமாக அழைத்தார்கள். தலையாட்டிகளை படையினர் சந்தையிலோ, சோதனைச் சாவடி ஒன்றிலோ நிறுத்தும் போது அதிஷ்டவசமாக போராளிகளுக்கு தகவல் கிடைத்துவிடும். அந்த இடங்களை அவர்கள் முற்றாகத் தவிர்த்து விடுவார்கள்.

தமது உறவுக்காரப் பெண்களிடமும் நண்பர்களிடமும் எமக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளை சுக்ளா செய்திருந்தார். மிகவும் காரமான கறி வகைகளைச் சமைப்பதில் வடமராட்சி ஒரு பெயர் பெற்ற இடமாகும். ஆகவே, வகைவகையாக எமக்கு உணவு கிடைத்தது. விசுவாசமும் அக்கறையும் உள்ள எத்தனையோ முகம் தெரியாத பெண்கள், தங்கள் உயிராபத்தையும் பொருட்படுத்தாது எமக்கு உணவு தயாரித்தார்களோ தெரியாது. உணவைச் சேகரிக்கும் பணி கந்தையா என்ற போராளியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் ஒழுங்கைகள் மாறி மாறி, சமைக்கும் வீட்டுக்குச்சென்று, பத்திரமாக உணவைக் கொண்டுவந்து விடுவார். வேறு வழிகளிலும் அங்குள்ள மக்கள் தாராள குணத்தோடும் ஆதரவோடும் நடந்து கொண்டார்கள். பின்னேரத் தேநீர் வேளை ஒரு முக்கியமான நேரமாகும். தேநீரோடு உண்பதற்காக தமிழ்ப் பெண்கள் ஏதா வது இனிப்பு வகையோ காரவகையோ சிற்றுண்டிகளாகச் செய்வார்கள். நாம் அந்தப் பக்கத்தில் இருக்கின்றமை தெரிந்தால் சின்னப் பையனோ பெண்ணோ கையில் ஓர் ஓலைப் பெட்டியுடன் என்னிடம் ஓடி வருவார்கள். தாயார் கொடுத்து விட்ட சிற்றுண்டி ஏதாவது அதில் இருக்கும். கோவில் திருவிழாக்களுக்காக பெண்கள் பொங்கும்போது எனக்கும் ஒரு வெள்ளித் தட்டு வந்து சேரும். அதில் அழகாக அடுக்கிய வாழைப்பழமும் ஒரு கிண்ணத்தில் புக்கையோ, எனக்கு வெகுவாகப் பிடித்த மோதகமோ இருக்கும். இந்தப் பெண்களை நான் நேரில் பார்த்ததில்லை. ஆனால், என்னையும் நினைத்து தங்கள் குடும்ப உணவை என்னோடு பகிரும் உணர்வுபூர்வமான தாராண்மை அவர்களிடம் இருந்தது. இப்படியான சிறிய சிறிய கருணை வெளிப்பாடுகளே, நானும் அவர்களில் ஒருத்தி என்ற உணர்வையும் நானும் அங்கத்தையவளே என்ற உணர்வையும் எனக்குத் தந்தன.

சுக்ளாவும் எமது போராளிகளும் மக்களுக்குள் நன்றாக ஊடாடிப் பழகினார்கள். இதனால் வடமராட்சியில் இராணுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பான பல தகவல்கள் எமக்குக் கிடைத்தன. அந்தப் பகுதி முழுவதிலுமே, இராணுவச் சுற்றிவளைப்பும் தேடுதல் முயற்சிகளும் சாதாரண நடவடிக்கையாகிவிட்டன. அவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு தேடுதல்கள் நடத்தினார்களோ, அவ்வளவுக்கு அவர்களுடைய நடவடிக்கை ஒழுங்கு விவரங்கள் பற்றி நாம் அறிய முடிந்தது. பொதுவாக இரண்டு வழிமுறைகளை அவர்கள் கையாள்கின்றமையை அவதானித்தோம். அநேகமாக அதிகாலையில், வெவ்வேறு பக்கங்களில் இருந்து படையணிகள் வந்து ஓர் இடத்தில் குவியும். அந்த இடத்தைச் சுற்றி வளைத்து தேடுதலை நடத்துவார்கள். ஆனால், கூடுதலாக என்ன நடக்கும் என்றால், சிறு சிறு காவல் உலா அணிகள் வெவ்வேறு பக்கத்திலிருந்து அல்லது வெவ்வேறு முகாம்களில் இருந்து ஓர் இடத்துக்கு வந்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து வெளியே இருந்து யாரும் உள்ளே வராமலும் உள்ளே இருந்து யாரும் வெளியே போகாமலும் அறுக்கைசெய்து, அதன் பின் வீடுவீடாக கட்டடம் கட்டடமாகத் தேடுதல் நடக்கும். கிளர்ச்சியை முறியடிப்பதற்கு இத்தகைய நடவடிக்கை அத்தியாவசியம் என்று இந்திய படைத் தலைமை கருதியது. ஆனால், அடுத்தடுத்து நடந்த தேடுதல்களே அவர்களுடைய மோசமான பலவீனத்தை உணர்த்தின. படையினரின் இந்தத் தொந்தரவை மக்கள் வெறுத்தார்கள். இந்தியர்கள் மட்டில் மக்களுக்கு இருந்த ஆதரவு ஒழிந்து போயிற்று. இந்த நடவடிக்கைகளின் போதே மக்களுடைய வீடுகளின் பௌத்திரம் சிதைக்கப்பட்டது. இந்தியர் புரிந்த மிக மோசமான அடாவடித் தனங்களும் இடம்பெற்றன. இந்தியப் படைத் தளபதிகளும் சாதாரண படையினரும் கலகங்கள் நடக்கும் வட இந்தியாவில் இருந்து தமிழர் தாயகத்துக்கு இறக்கப் பட்டவர்கள். தனது விழுமியங்களிலும் பண்பாடுகளிலும் பெருமைகொண்டிருந்த இந்த அமைதி காக்கும் யாழ்ப்பாண சமுதாயத்தின் வாழ்க்கை முறையும் மொழியும் பண்பாடும் அவர்களுக்கு முற்றிலும் வேறானதாகக் காணப்பட்டது. அவர்களுடைய கண்களுக்குப் புலனாகாத எதிரி, அடிக்கடி பொதுசன சமுத்திரத்தில் கரைந்து காணாமல் போய் விடுகின்றமையால் அனைத்து தமிழ் மக்களும் ஒன்றில் புலிகளாக அல்லது புலி ஆதரவாளர்களாக இருக்க வேண்டும் என்று இந்திய இராணுவம் கருதியது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தன்மையையோ வரலாற்றையோ இந்தியப் படையினர் சிறிதும் அறிந்திருக்கவில்லை. மேலும் முக்கியமானது என்னவென்றால் இந்த அமைதி காப்பாளர்கள் தமிழ் பகுதிகளில் தங்களுக்கு வழங்கப்பட்ட மனுவின் நோக்கம் என்ன என்பதை மறந்துவிட்டார்கள். நெறிமுறைக் கட்டமைப்புடன் ஒழுகும் தலைமையின் வழிகாட்டல் இல்லாததால் இந்தியப் படைகள் இலக்கின்றி கிராமங்களில் அலைந்து திரிந்து புலிவேட்டை என்ற பெயரில், பொதுமக்கள் மீது மனிதாபிமானமற்ற முறையில் கொடுமை புரிந்தார்கள்.

*மிகவும் காரமான கறி வகைகளைச் சமைப்பதில் வடமராட்சி ஒரு பெயர் பெற்ற இடமாகும். ஆகவே, வகைவகையாக எமக்கு உணவு கிடைத்தது. விசுவாசமும் அக்கறையும் உள்ள எத்தனையோ முகம்தெரியாத பெண்கள், தங்கள் உயிராபத்தையும் பொருட்படுத்தாது எமக்கு உணவு தயாரித்தார்களோ தெரியாது. உணவைச் சேகரிக்கும் பணி கந்தையா என்ற போராளியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் ஒழுங்கைகள் மாறி மாறி, சமைக்கும் வீட்டுக்குச் சென்று, பத்திரமாக உணவைக் கொண்டுவந்து விடுவார். வேறு வழிகளிலும் அங்குள்ள மக்கள் தாராள குணத்தோடும் ஆதரவோடும் நடந்து கொண்டார்கள்.*

(தொடரும்...)

# சவால்களுக்கு முகம் கொடுத்தவாறு சாதிக்க வேண்டிய நிலையில்தான்!

## கிளிநொச்சி நிகழ்வில் அனந்தி

கிளிநொச்சி,ஓக.17

எனது அமைச்சுப் பதவி எப்போது பறிக்கப்படுமோ தெரியாது. ஆனாலும், நான் ஒரு பெண் என்ற ரீதியில் பல விடயங்களைச் சாதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன் என வட மாகாண கூட்டுறவு, மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.



சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வு நேற்றுமுன் தினம் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் இணை பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்மற்றும்அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் அனந்தி தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

யுத்த காலத்தில் கூட்டுறவு பணியாளர்களின் பங்கு அளப்பரியதாக இருந்தது. யுத்தம் இடம்பெற்ற சூழலில் காயமடைந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என பலருக்கும் இந்தக் கூட்டுறவுசங்கங்களால்பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

இன்று நான் அமைச்சராகப் பொறுப்பெடுத்துள்ள நிலையில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றேன். வழங்கப்பட்ட அமைச்சு பதவியும் எப்போது பறிக்கப்படும் என்ற அச்சம் உள்ளது, இருந்தாலும் நான் ஒரு பெண்ணாக சாதிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பில் இன்று அரசஅதிபர், பிரதேச செயலாளர்களுடன் சற்று முன் பேசியுள்ளேன். - என்றார்.

இந்த நிகழ்வின்போது கூட்டுறவாளர்தினப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. கூட்டுறவு பணியில் ஈடுபட்டவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ம)

# ஆலய உற்சவங்கள்

ஏழாலை,ஓக.17

ஏழாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.30 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் இரவு 7.45 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெறும்.எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் நடைபெற்றுத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (இ)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.17

யாழ். வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சதுர்த்தி விரதம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகமும், மூலமூர்த்தி பூசை என்பன இடம்பெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளி வீதி வலம் வருவார். (இ)

* * *

அரியாலை,ஓக.17

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ)

# இறக்குமதி சீனிக்கான வரி அதிகரிப்பு

கொழும்பு,ஓக.17

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான விசேட இறக்குமதி வரி 08 ரூபாவால் அதிகரிக்கப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

16 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் இந்த வரி அதிகரிப்பு நடைமுறைக்கு வரவுள்ளது.

அதன்படி, தற்போது நடைமுறையில் உள்ள 10 ரூபா வரி 18 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த வரி அதிகரிப்பால் சந்தையில் சீனியின் விலையில் மாற்றம் ஏற்படமாட்டாது என சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)






யாழ். நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை பங்குத் தந்தை வண.சீ.யே.அன்ரனி பாலா தலைமையில் நடைபெற்றபோது திருநாள் கூட்டுத் திருப்பலியை யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை ஒப்புக் கொடுத்தார். (இ-19)





சங்கானை லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபையை, சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 B1 இன் முதலாவது உப மாவட்ட ஆளுநர் தேவா பீட்டர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.
பதவியேற்ற பின்னர் மருத்துவ உபகரணங்களும், கல்விக்கான நன்கொடையும் வழங்கப்பட்டன. (இ-19)

# வெள்ளத்தில் மிதக்கிறது பீகார்: 41 பேர் சாவு





பீகாரில் பெய்து வரும் கன மழைக்கு இதுவரை 41 பேர் பலியாகி இருக்கிறார்கள். மேலும் 65 லட்சம் மக்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கிறார்கள்.

வடமாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. பீகார், அசாம், உத்தரகாண்ட், உத்தர பிரதேசம், மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களில்கடந்த சில நாள்களாக இடை விடாமல் மழை கொட்டி வருகிறது.

பீகாரில் கனமழையால் 25 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. ஏராளமான ஆறுகளில் வெள்ளபெருக்கு ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் அபாய அளவை தாண்டி வெள்ளம் ஓடுகின்றது.

பீகாரில் மழைக்கு 41 பேர் பலியாகி இருக்கிறார்கள். 65 லட்சம் மக்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். மீட்புப் பணிகளில் ராணுவ படை, விமானப்படை, தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டு உள்ளனர். அவர்கள் படகில் சென்றும், விமானத்தில் சென்றும் மக்களை மீட்டு வருகின்றார்கள். கனமழையால் ஏற்பட்ட, வெள்ளத்தில் ரயில் சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

அசாமில் 22 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 22 ஆயிரம் பேர் தவித்து வருகின்றார்கள். வெள்ளத்தால் வடகிழக்கு மாநிலங்களில் ரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் வெள்ளத்தில் சிக்கி பலியான 6 பேரின் உடலகளை ராணுவத்தினர் மீட்டுள்ளனர். மீட்புப் பணியில் ஈடுபட்ட ராணுவ வீரர் ஒருவர் மாயமாகிவிட்டார்.

உத்தரபிரதேசத்தில் பல ஆறுகளில் அபாய கட்டத்தை தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல மாவட்டங்களை வெள்ளம் சூழ்ந்து இருக்கிறது. அதனால் வெளியேற முடியாமல் தவித்த கிராம மக்களை மீட்புக்குழுவினர் மீட்டு வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பேசிக்கொண்டே இருக்காதீர்கள் களத்திற்கு வாருங்கள்: கமலஹாசனுக்கு சீமான் சவால்





பேசிக்கொண்டே இருக்காதீர்கள் களத்திற்கு வாருங்கள் என்று நடிகர் கமலஹாசனுக்கு நாம் தமிழர்கட்சியின்தலைவர் சீமான் சவால் விடுத்துள்ளார்.

ஊழல் செய்தவர்கள் ராஜினாமாச்செய்ய வேண்டும், அதற்கு அரசியல் கட்சிகள் ஏன் வலியுறுத்தவில்லைஎனகமலஹாசன் கூறுகின்றமை வெறும் பேச்சுதான் என்றும் சீமான் தெரிவித்துள்ளார்

சென்னையை அடுத்த தாம்பரத்தில் நாம் தமிழர் கட்சி பொதுக்குழு கூட்டம் நடை பெற்றது. இதில் அக்கட்சியின்தலைவர் சீமான் கலந்து கொண்டு பேசினார்.

மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்என்பதற்காக நீட் தேர்வில் ஓராண்டு காலத்துக்கு மத்திய அரசிடம் விலக்கு கேட்பதற்கு காரணம் இருக் கிறது. அதே காரணம் அடுத்த ஆண்டும் இருக்கும். அதனால் தான் அதற்கு நிரந்தர விலக்கு கேட் கிறோம்.

சாதி வேண்டாம் என்று சொல்கின்ற ஒருவர் இருப்பாராயின் சொல்லுங்கள், நான்தலைமைஏற்கிறேன் என்று நடிகர் கமல ஹாசன் கூறியுள்ளார். நடிகர்சிவாஜி கணேசன் சிலையை அதே இடத்தில் வைக்க கமலஹாசன்குரல்கொடுப்பேன் என்று சொல்லட்டும். அவரு டன் சேர்ந்து நானும் குரல் கொடுக்கிறேன்.

ஊழலை எதிர்த்து ஓர் ஆர்ப்பாட்டம் செய்வோம் என கமலஹாசன் தெரிவிக்கட்டும். நாங்கள்அதில் கலந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம். தமிழகத்தில் ஊழல் செய்தவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும். அதற்கு அரசியல் கட்சிகள் ஏன் வலியுறுத்துகின்றன அல்ல என கமல ஹாசன் கூறுகின்றமை வெறும் பேச்சுதான். ராஜினாமா செய்ய இங்கு யாரும் காமராஜர் போல் அல்லர் என்றும் சீமான் தெரிவித்துள்ளார்.

## ‘ஜெ’மரணம் தொடர்பாக நீதி விசாரணை; ஆதாரம் சமர்ப்பிக்கத் தயார் – திவாகரன்



ஜெயலலிதா மரணம் தொடர் பாக நீதி விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டால் அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும் என சசிகலாவின் உறவினர் ஜெயானந்த் திவாகரன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் துணை பொதுச் செயலாளராக உள்ள டி.டி.வி.தினகரன் மதுரை மேலூரில் நேற்று முன்தினம் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடத்தினார். அப்போது, ஜெய லலிதா மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடத்த வேண் டும் என தினகரன் பேசினார். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அணியில் உள்ள எம்.எல். ஏ க்கள், தினகரன் பொதுக் கூட்டம் நடத்தியமை தொடர்பாக சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சசிகலாவின் உறவினரான ஜெயானந்த் திவாகரன் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளார். அதில், ஜெயலலிதா சிகிச்சை குறித்த 100 சதவீத ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. நீதி விசாரணை நடத்தப்படும் பட்சத்தில் ஜெயலலிதா சிகிச்சை தொடர்பான புகைப் படங்கள், வீடியோக்கள் சமர்ப்பிக்கப்படும். முதலமைச்சர் பழனிச்சாமி விருப்பப்பட்டால் ஜெயலலிதா மரணம் தொடர்பான நீதி விசாரணைக்கு உத்தரவிடலாம் என்றும் தெரி வித்துள்ளார்.

மேலும், எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணி சசிகலாவிடம் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும், பணம் கொடுத்து மேலூர் பொதுக் கூட்டத்தை நாங்கள் கூட்ட வில்லை என்றும் ஜெயானந்த் தெரிவித்துள்ளார்.


## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இரண்டாவது தடவையாக ஆலோசனைக்குழுவை அமைத்தல்

“உள்ளூராட்சிக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய சிரேஷ்ட பிரஜைகள், விடய அறிஞர்கள், வட்டார அங்கத்தவர்கள் மற்றும் பிரதேசத்தில் இருக்கக்கூடிய தகைமையாளர்களை உறுப்பினர்களாக கொண்டதாக ஓர் ஆலோசனைக்குழு ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் அமைக்கப்பட வேண்டும்”. இந்தக் குழு பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி சபைக்குமிடையில் ஒரு பாலமாக விளங்க தொழிற்பாடுகளை செயல்படுத்த வேண்டும் (உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இல. 10 பகுதி 3.2)

மேற்குறித்த சுற்று நிருபத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இரண்டாவது தடவையாக ஆலோசனைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் / நிபந்தனைகள்*

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக அல்லது ஆகக் குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி பொதுச்சேவை பற்றிய தெளிவான சிந்தனையுள்ளவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி சபைப் பணியாளராகவோ அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினராகவோ அல்லது அரசியல் கட்சியொன்றின் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.
4. விண்ணப்பதாரி குற்றவாளியாக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது. அவர் குற்றவாளியாகியிருந்தவர் என்று பின்னர் ஆதாரபூர்வமாக அறியப்படும் சந்தர்ப்பத்தில் அவரது உறுப்புரிமை உடனடியாக இரத்துச் செய்யப்படும்.
5. இக்குழுவானது யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஒருவருட காலத்திற்கு ஆலோசனை வழங்கும்.
6. விண்ணப்பதாரி கீழ் குறிப்பிட்டவற்றில் ஒன்றில் அல்லது சிலவற்றில் யாழ்ப்பாணம் மாநகர வாழ்வியல் போக்கின் புரிதலுடன் கூடிய பரந்த அறிவினை / பாண்டித்தியத்தினை/ நீண்டகாலஅனுபவத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
   i. மாநகரசபை எல்லைக்குட்பட்ட அபிவிருத்தியும் உட்கட்டமைப்பும்
   ii. திண்மக்கழிவு முகாமைத்துவமும் சூழல் பாதுகாப்பும்
   iii. நகரத் திட்டமிடல்
   iv. பொதுச்சுகாதாரமும், சுகாதார நல மேம்பாடும்
   v. மாநகரசபையால் வழங்கப்படும் மக்கள் – நட்புசேவைகள் தொடர்பானஅறிவு
   vi. நீர் விநியோகமும் கழிவுநீர் பரிகரித்தலும்
   vii. குளங்கள், வாய்க்கால்கள், வடிகால்கள் – செயற்பாடும் பராமரிப்பும்
   viii. நூலகங்கள், கல்வி மற்றும் கலாசார மேம்பாடு
   ix. பொழுதுபோக்கு அம்சங்களும் ஓய்வு வசதிகளும்
   x. பொதுச்சேவையின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்
   xi. சபையின் வருமான மேம்பாடும் நிதி முகாமைத்துவமும்
   xii. ஆளணி உள்ளிட்ட வளங்களின் ஒதுக்கீடு
7. ஆலோசனைக்குழுவில் 11 பேர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதோடு, அவர்கள் ஆலோசனை வழிகாட்டல் சட்டகம் ஒன்றின் கீழ் தம் பங்களிப்பை வழங்குவர்.
8. ஆலோசனைக்குழுவில் பெண்களின் பிரதிநிதித்துவம் கணிசமான அளவு எதிர்பார்க்கப்படுகிறது.
9. தெரிவு செய்யப்படுபவர்கள் இலவசமாக பொது நோக்கோடு கூடிய ஆலோசனைகள் வழங்குபவர்களாக இருத்தல் வேண்டும்.
10. தங்கள் தகைமைகளுடன் கூடிய சுயவிவரங்களை தாங்களே தயாரித்து 2017.09.10ஆம் திகதிக்கு முன் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல்வேண்டும். தபால்உறையின் இடதுபக்கமேல்மூலையில் “ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கான விண்ணப்பம்” என குறிப்பிடவும். விண்ணப்பங்கள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் பரிசீலிக்கப்பட்டு தகைமையானவர்கள் வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு: முதலாவது தடவையாக ஆலோசனைக் குழுவிற்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் தெரிவானவர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியும்.**

பொ.வாகீசன்,
ஆணையாளர்,

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# அகதிகள் முகாம் அருகே தற்கொலை தாக்குதல்; நைஜீரியாவில் 27 பேர் சாவு: 83 பேர் காயம்



அபுஜா, ஓக.17
ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹராம் இயக்கத்தின் பெண் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 27 பேர் பலியாகியுள்ளனர் எனவும், 83 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள் ளன.

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாத இயக்கம் பெருமளவில் தீவிரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றது. அங்குள்ள கிராமத்தினரை பணயக் கைதிகளாகப் பிடித்து அரசி டம் பேரம் பேசுவது உள்ளிட்ட அட்டு



ழியங்களில் இந்த இயக்கம் ஈடுபட்டு வருகிறது. இவர்களை வேட்டையாடும் பணியில் பன்னாட்டு இராணுவத்தி னர் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வட கிழக்கு பகுதியான மைதுகுரி என்ற நகரின் பக்கத்தில் இருக்கும் கோண்டுகா கிராமத்தில் உள்ள அகதிகள் முகாம் அருகே நேற்றுமுன்தினம் அந்த இயக்கத்தைச் சேர்ந்த இரு பெண் தற்கொலைப்படை தீவிரவாதிகள் தங்கள் உடல்களில் கட்டிவந்த வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

இந்த கொடூரமான தாக்குதலில் அங்கிருந்த 27 பேர் பலியாகினர் எனவும், 83 பேர் படுகாயமடைந்துள் ளனர் எனவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன. போகோ ஹராம் தீவிரவாத இயக்கம் இதுவரை நடத்தியுள்ள தற்கொலைப்படை தாக்குதலை பெண் தீவிரவாதிகளே அதிகளவில் நடத்தி யுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகுவோம்: அமெரிக்காவுக்கு ஈரான் அதிபர் எச்சரிக்கை



ஈரான் மீது அமெரிக்கா மேலும் பொருளாதாரத் தடை களை விதித்தால் அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகு வோம் என்று அந்த நாட்டு அதிபர் ஹசன் ரவுஹானி தெரி வித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர் மனி ஆகிய 6 வல்லரசு நாடு களுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015 ஜூலையில் அணுசக்தி ஒப்பந்தம் கையெ ழுத்தானது. அந்த ஒப்பந்தத் தில் அணுஆயுத தயாரிப்பில் ஈடுபட மாட்டோம் என்று ஈரான் உறுதி அளித்துள்ளது.

இந்நிலையில், டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க அதிபராக பதவியேற்ற பிறகு ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடை களை விதித்தார். தற்போது மேலும் கடுமையான பொரு ளாதார தடைகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டிருக்கின் றது என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து ஈரான் அதிபர் ஹசன் ரவுஹானி நேற்று கூறியவை வருமாறு :-

சர்வதேச அணு சக்திமுக மைக்கு ஈரான் முழு ஒத்து ழைப்பை நல்கி வருகிறது. ஆனால், அணுசக்தி ஒப்பந் தத்தை உடைக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முயற்சி செய்கின்றார். ஈரான் மீது கடு மையான பொருளாதாரத் தடை களை விதிக்க திட்டமிட்டுள் ளார். அவர் மீண்டும் பொருளா தாரத் தடைகளை விதித்தால் அணு சக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகுவோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளத்தால் சீர்குலைந்த நேபாளத்துக்கு சீனா 10 லட்சம் டொலர்கள் நிதியுதவி!

காத்மண்டு, ஓக.17
மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் சீர்குலைந் துள்ள நேபாள நாட்டுக்கு 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி செய்ய சீனா முன் வந்துள்ளது.

நேபாள நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வரு கிறது, மழையால் 27 மாவட் டங்கள் வெள்ளக்காடாகக் காணப்படுகின்றன. ரப்தி மற் றும் புதிரப்தி ஆறுகளில் வெள்ள நீர் கரை புரண்டு ஓடுகிறது. கரை கடந்து வெளியேறிய வெள்ளநீர் அரித்துச் சென்ற தால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், தாழ்வான பகுதிகளில் வசித்த பல்லாயி ரக்கணக்கான மக்கள் வெளி யேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகள் சுமார் ஆயிரம் வீடுகள் வெள்ள நீரில் மூழ்கி முற்றிலுமாக அழிந்துள்ளன. சுமார் 35 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. கடந்த ஐந்து



நாட்களில் மழை, வெள்ளம் மற் றும் நிலச்சரிவில் சிக்கி பலி யானவர்களின் எண்ணிக்கை 90 ஐக் கடந்துள்ளது.

மேலும் காணாமற் போன சிலரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன என அந்நாட்டின் உள்துறை அமைச் சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில், நேபாளத் தில் வெள்ள நிவாரணம் மற் றும் துயர் துடைப்பு பணிக ளுக்கு 10 லட்சம் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி அளிப் பதாக சீனா நேற்று உறுதி அளித்துள்ளது.

நேபாளத்தில் சுற்றுப் பய ணம் செய்துவரும் சீன நாட்டின் துணை பிரதமர் வாங் யாங், நேற்று நடைபெற்ற இருநாடு களின் துணை பிரதமர்களின் ஆலோசனைக் கூட்டத்தின் போது இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையே, கடந்த இரண்டாண்டுகளுக்கு முன் னர் நேபாளத்தின் ஹனுமான் தோக்கா தர்பார் சதுக்கம் பகுதியில் உண்டான நிலநடுக் கத்தால் சிதிலமடைந்த வர லாற்றுச் சிறப்புமிக்க அரண் மனையை 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்துத் தரு வதாக சீனா முன்னர் உறுதி அளித்திருந்தது குறிப்பிடத் தக்கது

## போர்த்துகலில் காட்டுத் தீ: பெரும் சேதம்; 64 பேர் சாவு!



போர்த்துகலில் பரவிய காட்டுத் தீ காரணமாக 64 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், அங்கு 100 ஹெக்டேயர் நிலப்பரப்பு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இந்நிலையில், அப்பகுதியை அண்டி வாழும் மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

பிரான்கோ காஸ்டிலோவில் விலா டி ரெய் எனும் காட் டுப்பகுதியே தீக்கிரையாகியுள்ளது. போர்த்துகலில் வறட்சியான காலநிலை தற்போது நிலவிவரும் நிலையில், காட்டுத் தீ பரவியுள்ளது.

இந்நிலையில், தீயை அணைக்கும் நடவடிக்கையில் தீயணைப்புப்படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

## குவாம் தீவு தாக்குதலை நிறுத்திவைத்துள்ளோம்!

### வடகொரியா அறிவிப்பு

வடகொரியா அண்மையில் கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை நடத்தியதால் அந்த நாட்டின் மீது ராணுவ நட வடிக்கை எடுப்போம் என்று அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். இதற்கு பதிலடியாக பசுபிக் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவின் குவாம் தீவை ஏவுகணை வீசி அழிப்போம் என்று வடகொரியா மிரட்டல் விடுத்தது. இதன் காரணமாக கொரிய தீபகற் பத்தில் போர் மேகம் சூழ்ந்தது.

இதனிடையே தென்கொரிய அதிபர் மூன் ஜே-இன் நேற்றுமுன்தினம் தெரிவித்தவை வருமாறு: - நாங்கள் போரை விரும்பவில்லை,



வடகொரியாவுடன் அமைதிப் பேச்சு நடத்து வோம் என்று அறிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்பும் எச்சரிக்கை வசனங்களை தவிர்த்து அமைதி காத்து வருகிறார். இதனால் போர் பதற்றம் சற்றுத் தணிந்துள்ளது.

இந்நிலையில் வடகொரிய அதிபர் கிம் ஜாங்-உன் நேற்றுமுன்தினம் மூத்த தளபதி களிடம் ஆலோசனை நடத்தினார். அப்போது குவாம் தீவு தாக்குதல் தொடர்பான வியூகங்களை அவரிடம் முப்படைத் தளபதிகள் விவரித்தனர். அதிபர் கிம் கருத்துத் தெரிவத்தபோது - முட்டாள் கள் (அமெரிக்கா) அடுத்து என்ன செய்ய போகி றார்கள் என்பதை பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை குவாம் தீவு மீதான தாக்குதல் திட்டம் நிறுத்தி வைக் கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# 1, 176 குடும்பங்களுக்கு வீட்டு வசதி தேவை; பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் தகவல்!

கிளிநொச்சி, ஓக. 17

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் ஆயிரத்து 176 குடும்பங்களுக்கு மின்சார வசதிகள் மற்றும் வீடுகள் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது என்றும், 367 குடும்பங்களுக்கு மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

முகமாலைப் பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்கள் தாங்கள் இந்தப் பகுதியில் மீள்குடியேறி ஒன்பது மாதங்களாகியுள்ள போதும், தங்களுக்கான மின்சார வசதிகளை ஏற்படுத்தித்தரவில்லை எனவும் அதனை பெற்றுத் தரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு மின்சார வசதியின்மையால் மீள்குடியேறி தற்காலிக வீடுகளில் வாழும் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றோம் என்றும் இந்த பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், தங்களுக்கான மின்சார வசதிகளை பெற்றுத் தருங்கள் என கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு மின்சார வசதிகளைஏற்படுத்திக்கொடுக்க வேண்டியிருக் கிறது என்றும் இது அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பச்சிலைப் பள்ளிப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 3 ஆயிரத்து 937 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இதில் 2 ஆயிரத்து 761 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

ஆயிரத்து 176 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. யுத்தத்தில் சேதமடைந்த 232 வீடுகளில் 25 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், 207 வீடுகள் புனரமைக்க வேண்டியுள்ளன.

3 ஆயிரத்து 937 தனியார் கிணறுகள் தேவையான நிலையில் ஆயிரத்து 665 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 221 கிணறுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளன.

3 ஆயிரத்து 570 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள போதும், 367 மலசல கூடங்கள் தேவையான நிலை காணப்படுகின்றன என பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகத்தின் புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மீள்குடியேறிய 958 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவையாக இருக்கின்றன என்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனது பிழையை மூடி மறைத்துக் கொள்ள புத்தரின் வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர்!

### குற்றஞ்சாட்டுகிறார் அனுரகுமார திஸாநாயக்க!



மோசமான திருடன் தனது பிழையை மூடி மறைத்துக் கொள்ள கௌதம புத்தரின் வார்த்தைகளை பயன்படுத்திக் கொள்கின்றான் என ஜே.வி.பி. யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள தொழிற்சங்கமொன்றின் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெளிவிவகார அமைச்சராகக் கடமையாற்றிய ரவி கருணா நாயக்க பதவியை ராஜினாமா செய்தமை குற்றச் செயலுக்கானதண்டனைகிடையாது.

எனினும், இதனை ஒரு தண்டனையாக சமூகத்தில் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்படும் ஒருநிறுவனத்தின் முன்னிலையில் ரவி கருணாநாயக்க நிறுத்தப்பட வேண்டும்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தவே ஜனாதிபதி ஆணைக் குழு நிறுவப்பட்டது.

எனினும், கொலைகாரனைத் தேடிச் செல்லும் போது கசிப்பு (சட்டவிரோத மதுபானம்) உற்பத்தி செய்பவதனை கைது செய்வதைப் போன்ற நிகழ்வே ரவி கருணாநாயக்க பதவி விலகிய மையாகும்.

பிணை முறி கொடுக்கல் வாங்கல்களின் பின்னரே ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு அர்ஜூன் அலோசியஸ் வாடகை செலுத்தியுள்ளார்.

குற்றவாளி ஒருவர் துறை சார் அமைச்சரின் வீட்டு வாடகை செலுத்தியமை தொடர்பில் தமக்கு தெரியாது என ரவி கருணாநாயக்க கூறியமை சட்ட ஆலோசனைக்கு அமைவாக எனக் கூறியிருந்தால் அது கையூட்டல் பெற்ற குற்றச் செயலாகி விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யோஷித்த ராஜபக்ஷ, ஷிரந்தி ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயரில் நாடு முழுவதும் 21 காணிகள் இருக்கின்றன என்றும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவர்கள் காணிகளை கொள்வனவு செய்த காணி உறுதி இலக்கம், கொள்வனவு செய்த தினம், செலவிட்ட பணம் தொடர்பான தகவல்கள் என்னிடம் இருக்கின்றன.

இப்படி பெருந்தொகையான காணிகளைக் கொள்வனவு செய்ய பணம் எப்படிக் கிடைத்தது? பொதுமக்களின் பணத்தை இப்படித் தவறாக பயன்படுத்தும் நபர்கள் நாட்டுக்காக எப்படி பணியாற்றுவர்கள் என்பது பிரச்சினைக்குரியது.

நீதிமன்றத்தில் இவர்களுக்கு தண்டனைகிடைக்காவிட்டால், மக்கள் மன்றத்தில் தண்டனை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு எதிராக கைநீட்டுவது தவறான செயற்பாடாகும்!

### சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு!

கொழும்பு, ஓக. 17

சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு எதிராக கைநீட்டுவது தவறான செயற்பாடு என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறது என அந்தச்சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ரோஹன த சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெளிவிவகார அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவை பிணைமுறி விவகாரத்தில் விசாரணைக்கு உட்படுத்தியமை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு எதிராகக் கைநீட்டுவதும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணி புரியும் அதிகாரிகளை இழிவுபடுத்தும் வகையில் கருத்துகளைத் தெரிவிப்பதும் தவறான செயற்பாடாகும்.

பிணைமுறி விவகாரத்தை வைத்து தனிப்பட்டவர்கள் அவர்களின் தனிப்பட்ட கருத்துகளை மக்கள் மயப்படுத்தி மக்கள் மத்தியில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உள்ள நற்பெயரை இழிவுபடுத்தப் பார்க்கின்றனர்.

மோசடி விவகாரம் வெளியாகி நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்படும் என்ற அச்சத்தில் அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். மோசடி தொடர்பான 50 கோப்புக்களை நீதிஅமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஒளித்து வைத்துள்ளார் என்று கூறியுள்ளமையிலேயே இந்த விடயம் நிரூபணமாகியுள்ளது.

ஆணைக்குழுவிலோ அல்லது நீதிமன்றத்திலோ முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்ட பின்னர் அதன் பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உரியது.

முறைப்பாடுகளுக்குரிய சாட்சியங்களும் நீதிமன்றில் அல்லது ஆணைக்குழுவில் தான் அளிக்க வேண்டும்.

அதன் பின்னர் விசாரணைகள் நடைபெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விசாரணை செயற்பாட்டில் ஏதும் தவறுகள் இடம்பெறும் பட்சத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு உரித்துடையது என்றும் அவர் கூறியுள்ளார்.

(க)

## பாணந்துறையில் நிர்வாண மனிதனால் மக்கள் பீதி!

கொழும்பு, ஓக. 17

பாணந்துறை பின்வத்த பிரதேசத்தில் நிர்வாணமாகத் திரியும் மர்ம நபர் ஒருவரால் மக்கள் பெரும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

நிர்வாணமாக இந்த நபர் இந்தப் பகுதியில் சஞ்சரித்த காரணத்தால் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இந்த நிர்வாண நபர் பின்வத்த பிரதேசத்தின் இரண்டு வீடுகளுக்குள் புகுந்து, திடீரென அந்த வீடுகளை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நபரைப் பிடிக்க பிரதேச மக்கள் முயற்சித்த போதிலும் அந்த முயற்சி வெற்றியளிக்க வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் ஓர் அமானுஸ்ய சக்தி, கிறிஸ் பேய், மனநோயாளி, கள்வன் எனப் பல்வேறு வதந்திகளால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இதனையடுத்து இந்தப் பகுதியின் பாதுகாப்பிற்காக பொலிஸார் விசேட ரோந்துப் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

(க)

## பாதுகாப்பு தலைமையகக் கட்டடக் கட்டுமானம்; பார்வையிட்டார் பாதுகாப்பு செயலாளர் கபில!

கொழும்பு, ஓக. 17

பத்தரமுல்ல அகுரேகொட பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பாதுகாப்பு தலைமையகக் கட்டடத்தொகுதியின் முன்னேற்ற செயற்பாடுகளை பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன பார்வையிட்டுள்ளார்.

இந்தப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த பாதுகாப்பு செயலாளர் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, இராணுவ பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர, கடற்படை பிரதம அதிகாரி ரியர் எட்மிரல் எஸ்.எஸ்.ரணசிங்க மற்றும் முப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.






# உதைபந்துப் போட்டிகளுக்கான 15 வயதின் கீழ் தேசிய அணி விவரம்

நேபாளின் காத்மண்டு நகரில் நாளை முதல் 27ஆம் திகதி வரை நடை பெறவுள்ள தெற்காசிய உதை பந்து சம்மேளனத்தின் (SAFF) 15 வயதின் கீழ்ப்பட்டவர்களுக் கான உதைபந்துத் தொடரில் பங்கு கொள்ளும் இலங்கை தேசிய அணியின் இறுதிக் குழாத்தை இலங்கை கால்பந்து சம்மேளனம் தெரிவு செய்துள்ளது.

இந்த அணிக்கான 30 பேர் கொண்ட வீரர்கள் குழாமொன்று கடந்த ஜூன் மாதம் தெரிவு செய்யப்பட்டது. இந்தக் குழாத்தில், கடந்த மார்ச் மாதம் இடம் பெற்ற தெற்காசிய - ஜப்பான் 16 வயதிற்கு உட்பட்ட நான்கு நாடுகளுக்கு இடையிலான போட்டித் தொடரில் இலங்கை அணியில் அங்கம் வகித்த 10 வீரர்கள் உள்வாங்கப்பட்டனர்.

எனினும், அதில் 8 வீரர்களே தற்பொழுது தெரிவு செய்யப்பட்டுள்ள இறுதிக் குழாமில் உள்வாங்கப்பட்டுள்ளனர். ரவிகுமார் தனுஜன், ஜீவக சமோட், மொஹமட் ரிகாஸ், மொஹமட் ருஸ்கான், மொஹமட் ஆஷிக், நாபீல் நிஸாம், சந்தீப வாஸ் மற்றும் விஷால்க சுலக்ஷன ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இறுதிக் குழாமில் 3 கோல் காப்பாளர்கள், 7 பின்கள வீரர்கள், 8 மத்தியகள வீரர்கள் மற்றும் 5 முன்கள வீரர்கள் உள்ளடங்குகின்றனர்.


இம்முறை 15 வயதின் கீழ் அணியை நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி வீரர் சன்தீப வாஸ் தலைமை தாங்கவுள்ளார். இவர், இலங்கை தேசிய அணி மற்றும் 19 வயதிற்கு உட்பட்ட தேசிய அணி என்பவற்றின் முன்னாள் வீரரும் கோல் காப்பாளருமான சனீர வாஸின் சகோதரராவார். குருநாகல் மலியதேவ கல்லூரி வீரர் ஜீவக சமோத் அணியின் உப தலைவராகச் செயற்படவுள்ளார்.

இந்த அணியில் வட மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் ரவிகுமார் தனுஜன் மற்றும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் இகினம் டினியாஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். அதேபோல், கிழக்கு மாகாணத்திலிருந்து ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மாணவன் மொஹமட் ரிஹான் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் இருந்து ஷெஹான் ப்ரயன் வீரப்புலி மற்றும் ருமேஷ் மென்டிஸ் ஆகியோர் உள்ள அதே நேரம், கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி கல்லூரி, நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி, கண்டி சில்வஸ்டர் கல்லூரி மற்றும் அனுராதபுரம் புனித ஜோசப் கல்லூரி என்பவற்றில் இருந்து தலா இரண்டு வீரர்கள் இந்த அணியில் அங்கம் வகிக்கின்றனர்.

இத்தொடரில் இலங்கை அணி தமது முதல் போட்டியாக நாளை 18ஆம் திகதி பங்களாதேஷை எதிர்கொள்ளவுள்ள அதேவேளை, 20ஆம் திகதி பூட்டானை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டிகள் அனைத்தும் காத்மண்டுவில் உள்ள ANFA விளையாட்டுத் தொகுதியில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கழுத்தைப் பதம் பார்த்த பந்து: நிலைகுலைந்த வோர்னர்!



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் உப தலைவரான டேவிட் வோர்னர், பயிற்சிப் போட்டியின் போது பவுண்சர் பந்து தாக்கி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கெதிராக டெஸ்ட் தொடரை முன்னிட்டு டார்வினில் நடத்தப்பட்ட 3 நாள் பயிற்சிப் போட்டியின் 2 ஆவது நாளின் 2 ஆவது இன்னிங்ஸின் போதே வோர்னர் இவ்வாறு உபாதைக்குள்ளாகியுள்ளார். இதன்போது ஹேசில்வுட் வீசிய பவுண்சர் பந்து வோர்னரின் தலையை தாக்கியமையை யடுத்து நிலைகுலைந்த வோர்னர், உடனடியாக மருத்துவர்களின் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

# கிண்ணம் வென்றது மட்டக்களப்பு அணி!



வடமராட்சி செவிப்புல னற்றோர் விளையாட்டுக் கழகத்தின் உதை பந்தாட்டக் கிண்ணத்தை மட்டக் களப்பு அணி கிண்ணத்தைச் சவீகரித்தது.

வடமராட்சி செவிப்புல னற்றோர் விளையாட்டுக் கழகத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் காலி அணியும் மட்டக்களப்பு அணியும் பலப் பரீட்சை நடத்தின. இரு அணிகளும் சமபலத்துடன் மோதியமையால் கோல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தபோதும் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் காலி அணியின் கோல் காப்பாளர் செய்த தவறு காரணமாக கிடைத்த தண்ட உதையை மட்டக்களப்பு அணியின் திருநாவுக்கரசு கோலாக மாற்ற 1:0 என வெற்றிபெற்று சம்பியனாகியது மட்டக்களப்பு அணி.

ஆட்ட நாயகனாக மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த ஜெயநீதன், சிறந்த கோல் காப்பாளராக நதூன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மூன்றாமிடத்தை வடமராட்சி அணி பெற்றுக்கொண்டது.

# வெள்ளிப்பதக்கத்தை சுவீகரித்தனர் யாழ்.பல்கலை மகளிர்!




பல்கலைக்கழகங்களுக்கு இடையில் தேசிய ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக அணி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுள்ளது.

சப்ரகமுவ மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டித் தொடரில் யாழ் பல்கலைக்கழக அணியுடன் ஸ்ரீஜெயவர்த்தன புர பல்கலைக் கழக அணி போட்டியிட்டது.

இந்தப் போட்டியில் ஸ்ரீஜெய வர்த்தனபுர பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது. இந்த போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது.

## முயற்சியிலிருந்து பின் வாங்காதீர்கள்

### போல்ட் அறிவுரை!



நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியிலிருந்து ஒருபோதும் பின் வாங்காதீர்கள் என சர்வ தேச தடகள போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற உலகின் மின்னல் வேக மனிதன் உசேன் போல்ட் இளம் தலைமுறையினருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

உலகில் யாராலும் நெருங்க முடியாதவாறு எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கிய, மின்னல் வேக மனிதரான ஜமேக்காவைச் சேர்ந்த உசேன் போல்ட், இறுதிப் போட்டியில் அடைந்த தோல்வியுடன் சர்வ தேச தடகள போட்டிகளில் ஓய்வு பெற்றார்.

உலக தடகள சம்பியன்ஷிப்பில் 11 முறை சம்பியன் பட்டமும், ஒலிம்பிக் போட்டிகளில் 8 தங்கப் பதக்கங்களையும் வென்று சாதனை படைத்துள்ள போல்ட்டிற்கு, கடந்த ஞாயிற்றுக்கிழமை ரசிகர்கள் பிரியா விடை கொடுத்தனர்.

ரசிகர்களின் பிரியா விடையை ஏற்றுக் கொண்டு போட்டிகளிலிருந்து முழுமையாக விடைபெற்றுச் சென்ற அவர், கடினமாக உழைத்தால் எதையும் செய்ய முடியும் என்பதை நான் நிரூபித்துள்ளேன். அது உங்களாலும் முடியும் என்று, இளம் தலைமுறையினருக்குக் கூறியுள்ளார்.

முயற்சியால் தான் இங்கு அமர்ந்து பேட்டி கொடுக்கின்றேன் எனவும், முயன்றால் எதுவும் சாத்தியம் என்பதே தனது தாரக மந்திரம் என்றும் கூறிய அவர், அனைவரும் முயற்சி செய்ய வேண்டும் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது எனக் கூறினார். அத்துடன், தான் நிச்சயமாக மீண்டும் சர்வதேச போட்டிக ளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித் துள்ளார் உசேன் போல்ட், 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் உலக சாதனையை தன்வசம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# வலுவான வீரர்களுடன் களமிறங்கிறது இலங்கை அணி

இந்தியாவுடனான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடருக்கான 15 பேர் கொண்ட வலுவான இலங்கை குழாம் ஒன்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 3:0 என முழுமையாக தோல்வியைச் சந்தித்ததோடு கடைசியாக தனது சொந்த மண்ணில் நடந்த ஸிம்பாப்வேயுடனான ஒருநாள் தொடரிலும் இலங்கை அணி 3:2 எனதோல்வியையே எதிர்கொண்டது.

இந்நிலையில் இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் நடைபெறவுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அங்கம் வகித்த இடதுகை சுழல்பந்து வீச்சாளர் மலிந்த புஷ்பகுமார மற்றும் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோ முதல் முறையாக ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர்களான சாமர கபுகெதர, சகலதுறை ஆட்டக்காரர் மிலிந்த சிறிவர்தன மற்றும் வேகப்பந்து வீச்சாளர் மற்றும் சகலதுறை வீரர் திசர பெரேரா ஸிம்பாப்வே தொடரில் தமது இடத்தை இழந்த நிலையில் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட்டில் எவ்வளவு சிறந்த திறமையை வெளிக்காட்டும் நாடாக இருந்தாலும் ஒரு கடினமான நிலையை தாண்ட வேண்டிய சுழற்சி முறை அனைத்து நாடுகள், அணிகளுக்கும் ஏற்படக்கூடியதாகும். இலங்கை மூன்று வகை கிரிக்கெட்டிலும் கடந்த 18 ஆண்டுகளாக சிறப்பாக செயற்படுகிறது. நாம் கடினமான நிலையை கடந்து வந்தமையை மறந்துவிடக்கூடாது. வெள்ளை நிறப்பந்தில் இலங்கை எப்போதும் பலமாக உள்ளது. நாம் வலுவாக ஆட்டத்திற்கு திரும்பி இந்தியாவை வீழ்த்துவோம் என்று நான் உறுதியாக உள்ளேன். எம்மிடம் திறமை இருக்கிறது, திறன் இருக்கிறது. நாம் கடுமையாக உழைக்கிறோம், எமக்கு உற்சாகமும் உங்களது ஆதரவுமே தேவைப்படுகிறது என்று இலங்கை ஒருநாள் அணியின் தலைவர் உபுல் தரங்க வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சிறிவர்தன கடைசியாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக ஆடியமையோடு கப்புகெதர சம்பியன்ஸ் தொடரில் பங்கேற்ற போது உபாதை காரணமாகப் பாதியில் விலகினார். கடந்த ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடந்த மறக்க முடியாத சம்பியன்ஸ்கிண்ணத் தொடருக்கு பின்னர் அணியில் இருந்து நீக்கப்பட்ட திசர பெரேரா அது தொடக்கம் நெட்வெஸ் T20 Blast தொடரில் க்ளோசஸ்டர்ஷெயர் அணிக்காக விளையாடினார்.

அசேல குணரத்ன, நுவன் பிரதீப், சுரங்க லக்மால் மற்றும் குசல் ஜனித் பெரேரா ஆகியோர் தமது உபாதைகள் காரணமாக அணித் தேர்வில் உள்ளடக்கப்படவில்லை. எனினும், ஸிம்பாப்வே தொடரில் விளையாடிய அனுபவ வேகப்பந்து வீச்சாளர் நுவன் குலசேகர மற்றும் இளம் வேகப்பந்து வீச்சாளர் அசித பெர்னாண்டோ இலங்கை குழாமில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

**இலங்கை ஒருநாள் குழாம்**

உபுல் தரங்க (தலைவர்), அஞ்சலோ மத்தியூஸ், நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க, குசல் மெண்டிஸ், சாமர கபுகெதர, மிலிந்த சிறிவர்தன, மலிந்த புஷ்பகுமார, அகில தனஞ்ஜய, லக்ஷான் சந்தகன், திசர பெரேரா, வனிந்து ஹசரங்க, லசித் மலிங்க, துஷ்மந்த சமீர, விஷ்வ பெர்னாண்டோ.

# டென்னிஸ் தரவரிசை: மீண்டும் முதலிடத்தை பிடிக்கிறார் நடால்



சின்சினாட்டி டென்னிஸில் விளையாட இயலாது என ரோஜர் பெடரர் கடைசி நேரத்தில் கூறிவிட்டமையை, டென்னிஸ் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு நடாலுக்கு பிரகாசமாகியுள்ளது.

ஒலிம்பிக் சம்பியனான இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே, சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறார். இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் மொன்ட்ரியல் போட்டியில் விளையாடவில்லை. தற்போது அமெரிக்காவின் சின்சினாட்டியில் தொடங்கியுள்ள சர்வதேச மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இருந்தும் விலகியுள்ளார். இதனால் அவரது முதல் இடம் பறிபோகிறது. தற்போது 2ஆவது இடத்தில் இருக்கும் 15 கிராண்ட்ஸ்லாம் வென்றவரான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், 2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பிறகு முதல்முறையாக மறுபடியும் முதலிடத்தைப் பிடிக்கின்றார். புதிய தரவரிசை அடுத்த வாரம் வெளியாகும்.

3ஆம் நிலை வீரர் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முதுகுவலியால் அவதிப்படுவதால் சின்சினாட்டி டென்னிஸில் விளையாட இயலாது என்று கடைசி நேரத்தில் கூறி விட்டார். இதில் பெடரர் பங்கேற்று இருந்தால் இந்த தொடரின் வெற்றி பெடரருக்கும், நடாலுக்கும் இடையே முதல் இடத்தைத் தீர்மானிக்கும் வகையில் அமைந்திருக்கும். பெடரரின் விலகலால் நடாலின் முதலிடம் சிக்கலின்றி உறுதியாகியுள்ளது.

31 வயதான நடால் கூறுகையில், 'சின்சினாட்டி டென்னிஸில் பெடரர் விளையாடாதமை என்பது வருத்தமான செய்தி. முதல் இடத்துக்கு மீண்டும் திரும்புவது என்னை பொறுத்தவரை சிறப்பு வாய்ந்த ஒன்று என்று தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்துக்கு மேற்கிந்தியத் தீவுகள் சவாலாக விளங்கும்

**அம்புரோஸ்**

இங்கிலாந்துக்கு எதிரான மூன்று டெஸ்டில் ஒன்றையாவது மேற்கிந்தியதீவுகள் வெல்லும் என அம்புரோஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியதீவுகள் அணி மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று எட்ஜ்பாஸ்டனில் தொடங்குகின்றது. இந்த டெஸ்ட் பகல் - இரவு டெஸ்ட் ஆக நடக்க இருக்கின்றது. இங்கிலாந்தில் நடைபெறும் முதல் பகல்-இரவு டெஸ்ட் இதுவாகும்.

இங்கிலாந்து அணி சமீபத்தில்தான் தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3:1 என கைப்பற்றியிருந்தது. இதனால் இங்கிலாந்து அணி மேற்கிந்தியதீவுகள் அணியை வெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஆனால், இங்கிலாந்துக்கு எதிரான மூன்று டெஸ்டில் மேற்கிந்திய தீவுகள் ஒன்றிலாவது வெற்றி பெறும். அல்லது இங்கிலாந்துக்கு கடும் சவாலாக விளங்கும் என முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அம்புரோஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அம்புரோஸ் கூறுகையில் மேற்கிந்தியதீவுகள் அணி ஒரு போட்டியிலாவது வெற்றி பெறும் அல்லது இங்கிலாந்து அணிக்கு கடும் சவாலாக விளங்கும் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். ஆனால், யதார்த்தமான நிலையில் மேற்கிந்தியதீவுகள் வீரர்கள் அப்படி விளையாடுவார்களா? என்பதை என்னால் உறுதியாக கூற இயலாது என்று தெரிவித்துள்ளார். அம்புரோஸ் 98 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 405 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். வால்ஷ் உடன் இணைந்து மேற்கிந்தியதீவுகள் அணிக்காக அபாரமான பங்களிப்பை கொடுத்துள்ளார்.

மேற்கிந்தியதீவுகள் அணி 2014 ஆம் ஆண்டு வங்காள தேசத்திற்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியிருந்தது. அதன் பின் தொடர்ந்து 6 டெஸ்ட் தொடர்களை இழந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அணிக்காக விளையாடும் அஸ்வின்!



இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின், முதல் தடவையாக இப்பருவத்துக்கான இங்கிலாந்து கவுண்டி போட்டிகளில் விளையாடவுள்ளார்.

அவர் பிரபல அணியான வொர்செஸ்டர்ஷயார் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை அணிக்கெதிராக ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் அஸ்வினுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதால் அவர் இம்மாத இறுதியில் இருந்து கவுண்டி போட்டிகளில் விளையாடுவார் என இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

எனினும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய அணியுடனான ஒருநாள் தொடருக்காக அஸ்வின் மீண்டும் நாடு திரும்பவேண்டும் என இந்திய தெரிவுக்குழு அறிவித்துள்ளதால், வொர்செஷ்டர்ஷயார் அணிக்காக 2 போட்டிகளில் மாத்திரம் அவர் விளையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது கருத்து வெளியிட்ட அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, அப்படிச் செய்வதற்கு அரசமைப்புத் திருத்தம் அவசியம் அற்றது எனவும் கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ராஜித சேனாரத்ன–

விசேட நீதிமன்றத்தை உருவாக்குவது என்பதற்கும், இருக்கும் நீதிமன்றத்தை விசேடமானதாக மாற்றுவதற்கும் வேறுபாடு உள்ளது. விசேட நீதிமன்றத்தை அமைப்பதற்கு அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். அது வேறு கதை. எனினும் மேல் நீதிமன்றங்களில் ஒன்று அல்லது இரண்டை 'ட்ரயல் அட்–பார்' முறையில் விசாரிக்கும் நீதிமன்றங்களாக மாற்ற முடியும்.

நாளாந்தம் வழக்கை விசாரிக்க முடியும். இலங்கை வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவ்வாறு இடம்பெற்றுள்ளது. இது செய்யாத விடயமல்ல. வழக்குகளை விரைந்து முன்னெடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் தனியார் சட்டத்தரணிகளை நியமிக்க முடியும். பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட போது அவ்வாறு செய்யப்பட்டது. அந்த வழக்கில் அரச தரப்பில் – சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக– பிரபல தனியார் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். அவர்களை சட்டமா அதிபர் திணைக்களம் பிரத்தியேகமாக நியமித்திருந்தது. அப்படிச் செய்வதற்கு வேறு புதிய திருத்தங்கள் தேவையில்லை.

அவை அனைத்தும் சட்டப் புத்தகத்தில் இருக்கின்றன. அல்லது நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். தேவை ஏற்படின் குறிப்பாக மேலும் 10 மேல்நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமாயின் மாத்திரமே அரசமைப்புத் திருத்தம் அவசியம்.

மேல் நீதிமன்றம் தொடக்கம் நீதிவான் நீதிமன்றங்கள் வரை நிர்வாக மாற்றங்களை ஏற்படுத்துவது மாத்திரமே இங்கு செய்யப்படுகின்றது. தேவை ஏற்படின் இவை அனைத்தும் செய்யக் கூடியவை. செய்ய வேண்டும் என கூறும் அமைச்சர்கள் இருப்பார்கள் ஆயின் இவற்றை செய்ய முடியும்.

ஒன்றில் மேல் நீதிமன்றத்தின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் அல்லது மேல் நீதிமன்றங்கள் இரண்டை 'ட்ரயல் அட்–பார்' முறையில் மாற்ற முடியும். இவை அனைத்தையும் செய்ய முடியும். அதற்கு எந்தவொரு அரசமைப்பு மாற்றமும் செய்ய வேண்டியதில்லை.

இதற்கு பிரதம நீதியரசரின் அனுமதி தேவை. சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் இணைந்து தீர்மானித்தால் இவற்றைச் செய்ய முடியும்.

நான் முன்மொழிந்த விடயம் என்னவென்றால் ஒன்று அல்லது இரண்டு மேல் நீதிமன்றங்களை நாளாந்தம் விசாரிக்கும் 'ட்ரயல் அட்–பார்' முறைக்கு மாற்றுவது. இவ்வாறு செய்தால் மக்களின் பிரச்சினைகள் முடிவடைந்துவிடும். – என்றார்.

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் கூறியிருக்கின்றார். அவருடைய கருத்து வேதனையை ஏற்படுத்தியுள்ளது." – என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

டெனீஸ்வரன் தொடர்பிலான நிலைப்பாடு குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்–

இந்த விடயத்தில் வைத்தியர் சத்தியலிங்கத்தை நான் நினைத்துப் பார்க்கின்றேன். இன்று வரை தனது கட்சியின் கட்டுப்பாட்டுடன் இணைந்து செயற்பட்டமையினால் அவரைக் கட்சி ஒரு போதும் கைவிடாத வாய்ப்பினை பெற்றுள்ளார். ரெலோவின் தலைமைக் குழு நாளை மறுதினம் சனிக்கிழமை வவுனியாவில் கூட இருக்கின்றது. டெனீஸ்வரன் தொடர்பாக நாங்கள் முடிவு எடுக்க வேண்டியுள்ளது. அரசியல் சூழ்நிலை தொடர்பிலும் நாங்கள் கலந்துரையாடவுள்ளோம்.

'அமைச்சர் டெனீஸ்வரன் ஊழல் செய்திருக்கின்றார், அவர் நிறைவேகையாடல் செய்திருக்கின்றார், துஷ்பிரயோகம் செய்திருக்கின்றார்.' – என்ற கருத்திற்கு எங்களுடைய கட்சியைப் பொறுத்த மட்டில் இடமில்லை.

ஆனால் அமைச்சரவையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்பதே எங்களுடைய பிரதான நோக்கம். நாங்கள் எழுதிய கடிதத்தில் ஊழல் தொடர்பிலும், அமைச்சர் டெனீஸ்வரன் தொடர்பிலும் எதுவும் இல்லை. ரெலோவின் தலைமைக்குழு கடந்த வாரம் கூடியபோது அமைச்சர் டெனீஸ்வரன் கலந்து கொண்டு விளக்கத்தையளித்தார்.

அவரிடம் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுமாறு கட்சி கோரியிருந்தது. ஆனால் தனக்கு ஒருநாள் அவகாசத்தை அவர் கேட்டிருந்தார். அவருடைய கோரிக்கைக்கு அமைவாக ஒருநாள் அவகாசம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்கள் மூலமாகத்தான் சுய விருப்பத்துடன் பதவி விலகமாட்டார் என அவர் தெரிவித்திருந்தார். அதிலும் குறிப்பாக ஒரு செய்தியை சொல்லி இருந்தார். கட்சி எனக்கு பெரியதில்லை என்ற நிலைப்பாட்டை கூறியிருக்கின்றார்.

டெனீஸ்வரன் இந்த விடயத்தில் அதுவும் கட்சி கூறியதை கேட்டிருந்தால், கடைசி வரைக்கும் ரெலோ அவருடன் நின்றிருக்கும்.

மாகாண சபை விவகாரம் என்பது மக்களுக்கு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மாறி மாறிக் கருத்துக்களை கூறுகின்ற விடயங்கள் எங்களுக்கும் வேதனையை ஏற்படுத்துகின்றன. மக்களுக்காகச் சேவை செய்ய வேண்டிய மாகாண சபையில் எங்களுக்குள் நாங்கள் அடிபட்டுக் கொண்டிருப்பது அல்லது விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டிருப்பது மன வேதனையைத் தருகின்றது. – என்றார்.

## கூட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலப்படுத்தும் நோக்கில் ஏழு உறுப்பினர்களும் அரசுடன் இணைய விருப்பம் தெரிவித்திருக்கின்றனர் என சு.க தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சாந்த பண்டார குறிப்பிட்டார்.

கூடிய விரைவில் ஏழு பேரும் இணைந்து கொள்ளவிருக்கின்றனர். அதற்கான பேச்சு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்றும் அவர் சொன்னார். (உ)

# உறுதியளித்த ரூ.15 கோடி கிடைத்ததும் கேப்பாபிலவு காணிகள் விடுவிப்பாம்

கொழும்பு, ஓக.17

கேப்பாபிலவில் பொதுமக்களின் காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கு கட்டியுள்ள கட்டடங்களை மாற்று இடங்களில் அமைப்பதற்கு தேவையான 14 கோடி 80 லட்சம் ரூபாவை தாம் பெற்றுத் தருவார் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உறுதி கூறியுள்ள நிலையில் –

அந்த நிதி கிடைத்த பின்னர் முல்லைத்தீவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்படி காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

முல்லைத்தீவிலுள்ள இராணுவத்தின் தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளை வேறு இடத்தில் அமைப்பதற்கு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் 14 கோடியே 80 லட்சம் வழங்குவார் எனக் கூறியிருந்தார்.

அந்த நிதி கிடைத்த பின்னர் முல்லைத்தீவில் இராணுவத்தின் முக்கிய முகாம்கள் வேறிடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறும் – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் முல்லைத்தீவு கேப்பாபிலவில் உள்ள 111 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்கப்பட உள்ளது எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியிருந்தார். அவரிடம் சுமார் 3 மணித்தியாலம் 30 நிமிடங்கள் வரை வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல யோஷிதவிடமும் நேற்று நீண்ட நேரம் வாக்கு மூலம் பெறப்பட்டது.

மஹிந்தவின் இளைய மகனான ரோஹிதவும் நேற்று முன்தினம் நிதிக் குற்றப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டிருந்தார். (உ)

## சிங்களத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பமிடுமாறு ஷிராந்தியிடம் கோரியுள்ளனர். அப்போது தனக்கு சிங்களம் வாசிக்கத் தெரியாது எனத் தெரிவித்தாராம் ஷிராந்தி ராஜபக்ஷ.

றகர் வீரர் வசீம் தாஜுதீன் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் – சிரிலிய சவிய எனும் அமைப்பின் கீழ் இருந்த – டிபண்டர் வண்டி தொடர்பில் இந்த விசாரணைகள் இடம்பெற்றன.

ஷிராந்தியுடன் கூடச் சென்ற சட்டத்தரணி ஜயந்த, தொலவத்த உள்ளிட்ட எவரும் விசாரணையின் போது விசாரணை அறைக்குள் அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் விசாரணையின் பின் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்த பொலிஸார் அதனை படித்துப் பார்த்து கையொப்பமிட ஷிராந்தியிடம் கோரியுள்ளனர். அப்போதே தனக்குச் சிங்களம் வாசிக்கத் தெரியாது என ஷிராந்தி கூறியுள்ளார்.

பதுளையில் பிறந்த ஷிராந்தி, சிங்களத்தைத் திடீரென மறந்தமை முழு குற்றப் புலனாய்வுப் பிரிவிலும் பிரபலமாகப் பேசப்படுகின்றது.

சிங்களம் தெரியாது என ஷிராந்தி கூறியமையைத் தொடர்ந்து விசாரணை அறைக்கு வெளியில் இருந்த சட்டத்தரணி ஜயந்த வீரசிங்கவை அழைத்த புலனாய்வுப் பிரிவு அவர் ஊடாக வாக்கு மூலத்தை வாசித்துக் காட்டியுள்ளது.

எனினும் சட்டத்தரணி கோரும் திருத்தங்களுக்கு அங்கு வாய்ப்பில்லாமல் போயுள்ளது. ஏனெனில் விசாரணை முழுவதையும் புலனாய்வுப் பிரிவு ஒலிப் பதிவு செய்துள்ளமையால் ஷிராந்தி தரப்புக்கு ஏற்றாற் போல் வாக்கு மூலத்தை மாற்றிக் கொள்ள முடியாமல் போகவே, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்த வாக்கு மூலத்தில் கையொப்பமிட்டு திரும்பியுள்ளார் ஷிராந்தி. (உ)

## ஜெனரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு வரும் ஓகஸ்ட் 21ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையிலேயே அவர் தம்மை ஓய்வுபெற அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக, இராணுவத் தளபதியாக இருந்த போது, ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா தமக்கு ஓர் ஆண்டு சேவை நீடிப்பு வழங்குமாறும் அல்லது இராஜதந்திரப் பதவி ஒன்றை வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டார். அதை அடுத்து, அவர் தற்போது ஓய்வுபெற விருப்பம் வெளியிட்டுள்ளார்.

ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா ஓய்வு பெற்றால், தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தவிர்ந்த ஏனைய பொலிஸ் அதிகாரிகள் தொடர்பிலேயே விசாரணை செய்வதற்கான அதிகாரத்தை ஆணைக்குழு கொண்டுள்ளது.

அரசமைப்புப் சபையின் சிபாரிசின் பிரகாரம் ஜனாதிபதியினாலேயே பொலிஸ் மா அதிபர் நியமனம் இடம்பெறுகின்றது. இதனால், பொலிஸ் மா அதிபருக்கு எதிராகக் குற்றச்சாட்டை முன்வைக்கவோ அதனை விசாரணை செய்யவோ ஆணைக் குழுவுக்கு அதிகாரம் இல்லையெனவும் அதன் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மீது எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் என நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## பொலிஸில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றுக் கருத்தில்லை.

அதேசமயம் தமிழர்களை வைத்தே தமிழர் போராட்டங்களை எதிர்காலத்தில் முறியடிக்கும் சிங்களவர்களின் தந்திரங்கள் நிறைவேறும்போது நாம் சிங்கள அடக்குமுறை தொடர்கின்றது என்று சர்வதேசத்திற்கு வெளிக்காட்ட முடியாமல் போகும் தாம் சங்கட நிலைமையும் ஏற்படும். இதனை முதலமைச்சர் உணரமாட்டாரா?

கடந்த காலங்களில் தமிழ்ப் பெண்கள் பொலிஸ் படையணியில் இணைந்தபோது பல கொடூரமான சித்திரவதைகளை எதிர்நோக்கிய சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. சித்திரவதைகளை எதிர்கொள்ள முடியாமல் பலர் வீடு நோக்கி ஓடியமையும், பின்னர் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

ஒரு நீதியரசராக, தமிழ் மக்களின் பிரதிநிதியாக, வடமாகாண சபையின் முதல்வராக, சிங்கள அரசினால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அத்தனை வன்முறைகளையும் அறிந்த வடக்கின் முதலமைச்சர் தமிழ் மக்களை இவ்வாறான தவறான பாதையில் வழிநடாத்துவதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு தனிநபர் தன்னுடைய வாழ்வியல் பொருளாதார வங்குரோத்துக் காரணமாக தனது சுயவிருப்பின் அடிப்படையில் பொலிஸ் படையணியில் இணைந்து கொள்வதை நான் தவறு என்று கூறவில்லை. அவரவரது சுயவிருப்பம். நாங்கள் அதனைத் தடுக்க இயலாது.

ஆனால் ஒரு பொறுப்புமிக்க தமிழ் மக்களின் பிரதிநிதியாக செயற்படும் ஒருவர், எமக்கென அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படாத நிலையில் பொலிஸில் தமிழர்களை இணையுமாறு ஊடகங்கள் வாயிலாக கருத்துக்கள் வெளியிடுகின்றமையையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு மாறாக இவ்வாறு செயற்படுகின்றமையையும் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ் மக்களுக்குரிய அதிகாரங்கள் அரசினால் முற்றுமுழுதாக வழங்கப்படும்வரை நாம் எமது உரிமைகளுக்காக, எமது எதிர்கால சந்ததியின் நலன்கருதி போராடவேண்டிய சூழ்நிலையே உருவாகியுள்ளது.

சிங்கள அரசினால் தமிழ் மக்களுக்காக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படாத நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இழுபறி நிலையில் தொடர்கையில், தமிழ் மக்களது பிரதிநிதிகளாகிய நாம் ஒற்றுமையாகச் சிந்தித்து, நிதானமாக நடக்க வேண்டும். தமிழ் மக்களைத் தவறான வழியில் கொண்டுசெல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும் என்பதுவே எனது கருத்தாகும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையில் யாழ்ப்பாண நீதிமன்ற பதிவாளர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

மாநகர சபைக்குச் சொந்தமான இந்தக் காணி கடந்த 2014 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

### இரண்டரை மணி நேர விசாரணையின்போது அநேகமான கேள்விகளுக்கு

# ‘எனக்கு ஒன்றும் தெரியாது’ என்றே பதிலளித்தாராம் ஷிராந்தி ராஜபக்ஷ!

கொழும்பு, ஓக. 17

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பாக, இலங்கையின் முன்னாள் முதற்பெண்மணி, ஷிராந்தி ராஜபக்ஷவிடம் எழுப்பப்பட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு அவர் ‘எனக்கு ஒன்றும் தெரியாது’ என்றே பதிலளித்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாஜுதீன் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது எனக் கூறப்படும், ஷிராந்தி ராஜ பக்ஷவின் கீழ் இருந்த சிரிரிய சவிய அறக்கட்டளைக்குச் சொந்தமான ‘டிபெண்டர்’



வாகனம் தொடர்பான விசா ரணைக்கு நேற்று முன்தினம் காலை குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு ஷிராந்தி ராஜபக்ஷ அழைக்கப் பட்டிருந்தார்.

அவருடன் மஹிந்த ராஜ பக்ஷ மற்றும் மகன் யோசித ராஜபக்ஷ ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர்.

இந்த விசாரணைக்கு எதிர்ப் புத் தெரிவித்து, குற்றப் புல னாய்வுப் பிரிவு தலைமை யகத்துக்கு வெளியே மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இரண்டரை மணிநேரம் ஷிராந்தி ராஜபக்ஷவிடம் விசா ரணைகள் நடத்தப்பட்டன. இதன் போது குற்றப் புல னாய்வுப் பிரிவினர் எழுப்பிய கேள்விகளுக்கு சிராந்தி பெரும்பாலும் வாயை மூடிக் கொண்டிருந்தார் எனத் தெரி விக்கப்படுகிறது.

சில கேள்விகளுக்கு மாத் திரம் ‘எனக்கு ஒன்றும் தெரி யாது’ என்று பதிலளித்தார் என்று தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவ கின்றன என்றும், இது தொடர்பாக சில உயர்மட்ட கைதுகள் தவிர்க்க முடியா தவை என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டுள்ளன. (க)

## ஷிராந்திக்காக விசாரணைப் பிரிவுக்குள் நுழைய முயற்சித்த 40 சட்டத்தரணிகள்!

கொழும்பு, ஓக. 17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் குற்ற விசாரணை திணைக்க ளத்திற்கு அழைக்கப்பட்டிருந் தார்.

விசாரணை இடம்பெறும் இடத்திற்கு ஷிராந்தி ராஜபக்ஷ மாத்திரமே அழைக்கப்பட்ட போதும், 40 சட்டத்தரணிகள் பலவந்தமாக விசாரணைத் திணைக்களத்திற்குள் நுழைய முயற்சித்துள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அவர்களை கட்டுப்படுத் துவதற்கு விசாரணை அதிகாரி கள் பலர் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர் என விசாரணை திணைக்கள தகவல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

குற்ற விசாரணை திணைக் களம் பலத்த பாதுகாப்பைக் கொண்ட இடமாகும். அத்துடன் சோதனைக்கு உட்பட்ட பின் னர் சட்ட திட்டங்களுக்கு அமையவே நபர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவர்.

எனினும் சட்டத்தை நன்கு அறிந்தவர்கள் இவ்வாறு செயற் பட்டமை வருத்தமளிக்கக் கூடிய விடயம் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர் என அந்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (க)

## சுப்ரீம் ஜெட் - I செயற்கைக்கோள் குறித்து அனைத்தையும் விவரித்துள்ளேன்!

### ரோஹித்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஓக.17

சுப்ரீம் ஜெட் - 1 எனும் செயற்கைக்கோள் குறித்து ஆரம்பம் முதல் தற்போது வரை நடை பெற்ற அனைத்தையும் நிதி மோசடி விசார ணைப் பிரிவினரிடம் விவரித்துள்ளேன் என்று ரோஹித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசின் காலத் தில் சீனாவின் உதவி யுடன் 32 கோடி ரூபா செலவில் ஏவப்பட்ட சுப்ரீம் ஜெட் - 1 எனும் செயற்கைக் கோள் தொடர்பில் இடம்பெற்ற நிதி மோசடி குறித்து வாக்கு மூலம் வழங்க முன்னாள் ஜனாதிபதி யின் இளைய மகன் ரோஹித்த நேற்று முன் தினம் நிதி மோசடி விசா ரணைப் பிரிவில் முன் னிலையாகி இருந்தார்.

இந்த விசாரணைகள் முடிந்து வெளியே வரும் போது ஊடக வியலாளர் களிடம் கருத்துத் தெரி விக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைவரும் என்னி டம் கேட்கின்றார்கள் எங்கே இந்த ‘சட்டலைட்’ உள்ளது? என்றே, இவர் களும் என்னிடம் முத லில் இதையே கேட்டார் கள் இதற்கு ஆரம்பம் முதல் தற்போது வரை நடந்தது அனைத்தை யும் தெரிவித்தேன்.

இந்தத் திட்டத்தில் முன்னர் இருந்தவர்கள் தற்போது இல்லை. விண் வெளி அமைப்பு பொறி யியல் குறித்து நன்கு தெரிந்த ஒருவன் இலங் கையிலேயே நான்தான்.

மிகவும் சாதாரணமான முறையிலேயே விசார ணைகள் நடைபெற்றன.

இந்த சுப்ரீம் ஜெட் -1 எனும் செயற்கைக் கோள் என்னுடையது அல்ல, அதில் வேலை செய்த ஒருவனே நான் என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன் என் றும் அவர் குறிப்பிட் டுள்ளார். (க)

## எமது குடும்பத்தைச் சிறையில் அடைத்தாலும் இந்த அரசு வீட்டுக்குச் செல்வது உறுதி!

கொழும்பு, ஓக. 17

எமது குடும்பத்திலுள்ள ஐவரையும் சிறையில் அடைத் தாலும் இந்த அரசு வீட்டிற்குச் செல்வது உறுதி என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஷிரந்தி ராஜபக்ஷவிடம் குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே நாமல் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது அம்மாவை குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைத்து விசாரணை செய்கின்றார்கள். தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணை நடத்துகின்றார்கள்.

இறுதியில் என்ன நடந்தது. மஹிந்த ராஜபக்ஷ வின் மனைவியைக் கூட இந்த அரசு விட்டு வைக்கவில்லை. அவரை பழிவாங்கும் அளவுக்கு கீழ்த்தரமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் தலைவருக்கு நான் ஒன்றை சொல்லுகின்றேன். எமது குடும்பத்திலுள்ள ஐவ ரையும் சிறையில் அடைத்தாலும், உங்களது அரசை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைக்கு இந்த நாட்டு மக்களைக் கொண்டு செல்வோம் என ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

யோசித ராஜபக்ஷ தெரிவித்தவை வருமாறு:-

என்னிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. எனினும் தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணைகள் நடைபெறுமா எனத் தெரியாது, ஆனால் வாகனத்தின் நிறத்தை மாற்றியமை தொடர்பிலேயே அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், சிரிலிய அமைப்பிற்கு வழங்கப்பட்ட டிபெண்டர் வாகனத்தின் நிறத்தை மாற்றி, ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலைக்காகப் பயன் படுத்தப்பட்டது எனக் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்த விசாரணைகளுக்காகவே ஷிரந்தி ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டிருந்தார்.



**நாமல் ராஜபக்ஷ பாய்ச்சல்!**

இதேவேளை, சீனாவின் உதவியுடன் 32 கோடி ரூபா செலவில் ஏவப்பட்ட சுப்ரீம் ஜெட் - 1 எனும் செயற்கைக் கோள் தொடர்பில் இடம் பெற்ற நிதி மோசடி குறித்து வாக்கு மூலம் வழங்க ரோஹித்த நேற்று முன்தினம்தினம் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக் கப்பட்டிருந்தார்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான தொடர் விசா ரணைகளால் மஹிந்த அணியினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

குறிப்பாக, குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கும் மஹிந்த குடும்பத்தினர் சென்று வந்தமை தொடர்பில் இவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு நிச்சயம் பதில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மஹிந்த ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒன்றிணைந்த எதிரணியினரும் மஹிந்தவும் கலந்துரையாடல்!

கொழும்பு, ஓக. 17

கொழும்பு அரசியல் சூழ்நிலை மிகவும் பர பரப்பாக உள்ள நிலை யில், முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் ஒன்றிணைந்த எதிரணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர் களுக்கும் இடையே நேற்று முன்தினம் முக் கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் கொழும்பி லுள்ள உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள் ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜ பக்ஷ குற்றப் புலனாய்வு பிரிவினால் விசாரி ணைக்கு உட்படுத்தப் பட்டனர். இந்த நிலையி லேயே நேற்று முன் தினம் இரவு இந்த அவசர கூட்டம் இடம் பெற்றுள் ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகம் தொடர்பில் தற்போது அரசு முன்னெடுக்கும் நட வடிக்கைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# டிப்பரிலிருந்து பஸ்ஸுக்குள் புகுந்த கட்டுமானக் கம்பிகள்!

## பஸ் சாரதி படுகாயம்; மதவாச்சியில் சம்பவம்



ஏ9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட கட்டுமானக் கம்பிகள் தனியார் பஸ்ஸுக்குள் கண்ணாடியை நொறுக்கிக்கொண்டு நுழைந்ததால் பஸ் சாரதி படுகாயமடைந்தார். அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா மதவாச்சியில் நேற்று மாலை 4.30 மணியளவில் கட்டுமானக் கம்பிகளுடன் சென்ற டிப்பர் வாகனத்துடன் தனியார் பஸ் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு:-

வவுனியாவிலிருந்து அம்பாறை நோக்கி பயணிகளுடன் சென்ற தனியார் பஸ், கண்டி வீதி, மதவாச்சி பகுதியில் அனுராதபுரம் நோக்கிக் கட்டுமானக் கம்பிகளை உரிய அடையாளப்படுத்தல்கள் இன்றி ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச்செல்லமுற்பட்டபோது டிப்பர் சடுதியாக நிறுத்தப்பட்டமையினால் தனியார் பஸ்ஸின் கண்ணாடிகளை நொறுக்கித்துளைத்துக் கொண்டு கட்டுமானக் கம்பிகள் பஸ்ஸுக் குள் பாய்ந்தன. இதில் சாரதி படுகாயமடைந்தார்.

வாகனத்துக்கு பின்புறமாக வெளியே நீட்டிக் கொண்டிருந்த கட்டுமான கம்பிகள் சரியாக அடையாளப்படுத்தாத வகையில் இருந்தமையினாலேயே இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-100)

# மின் தாக்கி தாய், மகன் பலி


பொலன்னறுவை, புலஸ்திபுர பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் தாயும் மகனும் உயிரிழந்த சோக சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அப்பிரதேசத்தில் உள்ள மேலதிக வகுப்பு ஒன்றுக்கு அருகில் இருக்கும் தேக்கு மரக்கம்பத்துடன் இணைக்கப்பட்டிருந்த மின் கம்பியில் 07 வயது சிறுவன் ஒருவன் மோதியதால் மின்சாரம் தாக்கியுள்ளது.

அப்போது மகனைக் காப்பாற்றுவதற்கு முற்பட்ட சிறுவனின் தாய் மீதும் மின்சாரம் பாய்ந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து தாயையும் மகனையும் புலஸ்திபுர வைத்தியசாலையில் சேர்க்கும் போது இருவருமே உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் புலஸ்திபுர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# விடுவிக்கப்பட்ட படகுகளைப் பார்வையிட இந்திய மீனவ, அதிகாரிகள் குழு வருகை

சட்ட விரோதமாக இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் 42 படகுகளை மன்னார், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை நீதிமன்றங்கள் விடுவித்து உத்தரவிட்ட நிலையில் –

அவற்றைப் பார்வையிட்டு, மீளத் தமிழகத்துக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தமிழக மீனவர் தரப்புக் குழு ஒன்று இன்று இலங்கை வருகின்றது.

இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் நாகை மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் விடுவிக்கப்பட்ட 42 படகுகளைப் பார்வையிட தமிழக மீனவர்கள் மற்றும் அதிகாரிகள் குழு இன்று வருகின்றது.

இக் குழுவில் இராமநாதபுர மீனவ அமைப்பின் மேலதிக பணிப்பாளர் ஜி.எஸ் சமீரன், இராமேஸ்வர மீனவர்களின் பிரதிப் பணிப்பாளர் மணிகண்டன், பம்பன் மீனவர்களின் இன்ஸ்பெக்டர், புதுக்கோட்டை இராமேஸ்வரம், நாகபட்டினம் பகுதி மீனவத் தலைவர்கள் மற்றும் இயந்திரப் படகு திருத்துநர் உட்பட 7 பேர் இடம்பெறுகின்றனர்

# இந்தியா விலக்கிய சமிக்ஞை விளக்குகள் இங்கு வடபகுதி ரயில்வே கடவைகளில்!




இந்தியாவில் தடைசெய்யப் பட்ட ரயில் கடவை சமிக்ஞை விளக்குகளே வடக்கில் பொருத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவோம் என வடக்கு, கிழக்கு ரயில்வே கடவைக் காப்பாளர் சங்கத் தலைவர் றொஹான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

தாண்டிக்குளம் ரயில் கடவையில் விபத்து ஏற்பட்டு ஒருவர் மரணமடைந்தமையைக் கண்டித்து அப்பகுதி மக்களால் ரயிலை மறித்து நடத்தப்பட்ட போராட்டத்தின்போது மக்கள் பிரதிநிதிகளும், பொலிஸாரும் அங்கு இருந்துள்ளனர். இதன் போது பொலிஸார் ரயில்வே திணைக்களத்திற்கு உரித்தான கடவைக்குச் சென்று ரயில்வே கடவைக் காப்பாளர்கள் மீது குற்றச் சாட்டைச் சுமத்தியுள்ளனர். இதனை நாம் கண்டிக்கின்றோம்.

எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு எந்த நிலையிலான பொலிஸ் அதிகாரியானாலும் ரயில்வே கடவைக் காப்பாளர்களிடம் பொதுவான மன்னிப்பை கோரவேண்டும்.

வடக்கிற்கான ரயில் சேவை இடம்பெற்றதன் பின்னர் 41 ரயில் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 35 உயிரிழப்புகள் நேர்ந்துள்ளன. இதில் குறிப்பிடப்படவேண்டிய விடயம் எங்களது ஊழியர்கள் கடமையில் உள்ள கடவைகளில் எந்த விபத்தும் ஏற்படவில்லை.

இவ்விபத்துக்கள் பொலிஸாரின் கவலையீனத்தால் ஏற்பட்டவை அல்லது ரயில்வே திணைக்களம் அவ்விடங்களில் இருந்து தமது ஊழியர்களை வெளியேற்றியமையினால் ஏற்பட்டவை.

அத்துடன் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவினால் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டமையினால் ஏற்பட்ட விபத்துகளுக்கும் ரயில்வே திணைக்களமும் பொலிஸ் திணைக்களமும் முழுமையான பொறுப்பேற்க வேண்டும்.

இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட தான தானியங்கி சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து அகற்றப்பட்டவை. இந்த சமிக்ஞை விளக்குகள் அந்த நாட்டில் பயன் படுத்தத் தடைசெய்யப்பட்டவை என்பதனை நாம் உறுதிப்படுத்துவோம். இந்த சமிக்ஞைகள் தொடர்ந்தும் இயங்குவதனால் மின்சார சபைக்கு பெரும் நட்டம் ஏற்படுவதுடன் அதில் உள்ள மின் குமிழ்கள் தொடர்ந்து பழுதடைவதால் அவற்றை இந்தியாவில் இருந்தே கொண்டு வர வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே ரயில்வே திணைக் களம் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். – என்றார். (உ-100)

# நெடுந்தீவுக் குதிரைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவேயில்லை!



## பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் ஐங்கரநேசன் விசனம்

நெடுந்தீவில் உள்ள குதிரை இனங்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் –

நெடுந்தீவில் மரபுரிமை சொத்தாகவுள்ள குதிரைகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு உண்டு. ஆனால், அண்மையில் நெடுந்தீவில் பல குதிரைகள் இறந்தன. இதற்கான காரணத்தை இன்னும் வன ஜீவராசிகள் திணைக்களம் வெளியிடவில்லை. குதிரைகள் இறந்தமைக்கு வறட்சி, குடிநீர் பிரச்சினைகளைக் காரணம் கூற முடியாது. இதையும் விட வறட்சியான சூழலிலும் குதிரைகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால், வன ஜீவராசிகள் திணைக்களம் இது வரையும் புள்ளி விவரங்களை கூட வெளியிடவில்லை.

வனஜீவராசிகள் திணைக்களம் 10 குதிரைகள் இறந்தன என அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆனால் உண்மையில் இறந்தது 13 குதிரைகள். அது பற்றிய தகவல்களை நாங்கள் நேரில் சென்று பார்வையிட்டுத் திரட்டியுள்ளோம். நெடுந்தீவு பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையான குதிரைகள் உள்ளன. அவற்றிற்குத் தகுந்த போஷாக்கு உணவு வழங்கி அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். எமது மரபுரிமைச் சொத்தான குதிரை வளத்தை பாதுகாக்கும் பொறுப்பு வன ஜீவராசிகள் திணைக்களத்திற்குதான் உண்டு.

குதிரைகளின் இறப்பு தொடர்பாக மருத்துவ ஆய்வுகளை மேற்கொண்டு கருத்து வெளியிடாதமையால் இதனைப் பாதுகாக்கும் உரிமை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு உண்டு என ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் –

யாழ். மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் நெடுந்தீவு மேலும் பின்தள்ளப்பட்டு வருகிறது. இதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் பலர் இங்கு சேவையில் ஈடுபடுவதை புறக்கணித்து வருகின்றனர். குறிப்பாக வைத்திய சேவையில் ஈடுபடுபவர்கள் இங்கு வருகின்றமையைப் புறக்கணிக்கின்றனர். இன்றைய தினம் நடத்தப்படும் இந்தக் கூட்டத்தையும் வைத்திய சேவையாளர்கள் புறக்கணித்துள்ளனர்.

நெடுந்தீவின் மரபுரிமையான குதிரைகள் அண்மையில் இறந்தமைக்காக காரணத்தை வெளியிடவில்லை. இது குறித்து வன ஜீவராசிகள் திணைக்களம் கவனம் செலுத்தவில்லை. – என்றார் சிறிதரன்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.